அரசியல்
# சூரியன்
புலனாய்வு மாத இதழ்
ARASIYAL SURIYAN
ISO 9001:2015 CERTIFIED MAGAZINE
மலர்:2 / இதழ்:3 / ஆகஸ்ட் 2023 / தமிழ், ஆங்கில மாத இதழ்/ Volume:2 / Issue:3 / August 2023 / Tamil, English Monthly

வட மாநிலங்களில் பயனளித்த யாத்திரைகள்!
தமிழகத்தில் பாஜகவிற்கு பயனளிக்குமா?

சுதந்திர தின சிறப்பு மலர்

ரூ.15/-



அன்புமணி அரெஸ்ட்டும் ஆத்திரத்தில் தொண்டர்களும்





கலைஞரைப் போலவே முதல் விதையை தர்மபுரியில் விதைத்த முதல்வர்

மணிப்பூரில் நடப்பது மத கலவரமா? இனக்கலவரமா?






பாஜகவிலும் வாரிசு அரசியல்!

# ஆகஸ்ட் 15 சுதந்திர தினம்



சுதந்திரத்தை திகட்ட திகட்ட
சுவாசித்து விட்ட நாம்...
76வது சுதந்திர தினத்தின்...
அமுதப் பெருவிழாவை
அகமகிழ வரவேற்போம்.

இதம் தரும் மனையை நீங்கி
இடர்மிகு சிறைப்பட்ட
சுதந்திர வீரர்களால் நமக்கு
சிறைப்பட்டது சுதந்திரம்.
பாரத தேசம் தன்னில்
போராட்ட வீரர்களை பலியாக்கி பின் எம்மை
வாழ்விக்க வந்த சுதந்திரமே
உன்னை தொழுவதில் பேரானந்தம்...



இதோ பட்டொளி வீசி சுதந்திரக்
கொடி பறக்கிறது..
அதன்நிழலாய்,நினைவாய்,
மிஞ்சி கிடக்கிறது....
பல்லாயிரம் போராட்ட
வீரர்களின்
பலிதானம்....

அந்நிய
அடக்குமுறைக்கு எதிரான
போராட்டத்தின்
பலனாக கிடைத்தது சுதந்திரம்...

என்னதான் சுதந்திரம் பெற்றும்
எளியோரை வலியோர் வாட்டும்
வழக்கமிங்கு மாறவில்லை....

அதிகார ஆணவத்தை விரட்ட
இங்கு வேண்டும் இன்னொரு விடுதலைப் போர்...
காலணியாதிக்கத்தை விரட்டிய எமக்கு..
காலனிகளை(சேரிகளை) விரட்ட வழி
தெரியாமல் விழிக்கின்றோம்!...

சமத்துவம் சமத்துவம் என்று சொல்லி.... சொல்லி....
வல்லிய சாதியினரை
வேட்பாளராக்கும் வியாதிக்கு வேண்டும் ஓர் விடுதலை...

சுதந்திரத்தின் அடையாளமாய்
ஆனந்தமாக பறக்கும் மூவர்ணக் கொடியே!
நீ வீசும் வேகத்தால் வெளிவரும் காற்று
இங்கு ஏழை பணக்காரன்,
கீழோர் மேலோர்,
எனும் வித்தியாசத்தை விரட்டுமா?

**அரசியல் சூரியன்**

# அரசியல் சூரியன்

தமிழ் ஆங்கில மாத இதழ்

*ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர்*

**K.மணிகண்டன் B.Com.,**

*இணை ஆசிரியர்*

**சாந்தி மணிகண்டன்**

*கௌரவ அரசியல் ஆலோசகர்*

**பெருஞ்சித்தன் / N.ஈஸ்வரன்**

*கௌரவ ஆசிரியர்*

**முனைவர். மு.வரதராஜ் பெருமாள்**

*உதவி ஆசிரியர்கள்*

M.சையது அலி / S.கார்த்திகேயன்

குளித்தலை A.அலாவுதீன் / M.முனியம் சிவ சண்முகம்

*சிறப்பு ஆசிரியர்கள்*

M.மதன்குமார் / M.கமர்தீன்

A.சுந்தரம் / பிரதீப் சந்திரதாஸ்

R.யுவராஜ் / ஜான் சாமுவேல்

*தலைமை நிருபர்கள்*

T.N.மகேந்திரகுமார் / S.வஜ்ரவேல் /

P.பாலகங்காதரன்

*கொங்கு மண்டல நிருபர்*

N.அருண் விக்னேஷ்

*மாவட்ட நிருபர்கள்*

M.சரவணன் - ஈரோடு / K.மோகன்ராஜ் - கரூர்

P.ஹரிஹரன் - திண்டுக்கல் / R.பாஸ்கர் - தஞ்சாவூர்

C.குமார் - நாமக்கல் / G.சுகுமாறன் - கிருஷ்ணகிரி

G.சுகுமாறன் - கிருஷ்ணகிரி / K.கனகராஜ் - சேலம்

G.நயினாமுகமது - சிவகங்கை / AGஏழுமலை - கள்ளக்குறிச்சி

R.வீரமணி - திருவாரூர் / M.முனிவேல் - தர்மபுரி

*நிருபர்கள்*

R.கோவிந்தராஜ்
A.R.செந்தில்குமார்
G.ரவிசங்கர்
N.நரசிம்மமூர்த்தி
B.வெங்கடேஷ்
R.தங்கபாண்டியன்
N.தியாகு
S.சசிகுமார்
Y.சேக் பரீத்
A.நேதாஜி
D.பிரபாகரன்
S.மஜார்
V.S.ஜோசப்
K..ரவீந்திரன், மத்தியசென்னை
S.செல்வராணி
V.கனகசபாபதி
A.ஆம்ஸ்ட்ராங் தென்சென்னை
A.அருண்குமார்
P.ராமகிருஷ்ணன்

*சட்ட ஆலோசகர்*

ஜெயம் இ.புஷ்பராஜ் B.A.,B.L., / KTV பிரபு B.A., LLB.,

வேல்முருகன் M.A., B.L., / சபரிகீதன் M.A., B.L.,



98/1, Vijayamangalam Road, Hospital Road,
Utthukuli, Tiruppur - 638751. Mobile: 90253 05909
E-mail: arasiyalsuriyan77@gmail.com



**அரசியல் சூரியன் மாத இதழின் அறிவுறுத்தல்**

அரசியல் சூரியன் மாத இதழில் இணைந்துள்ள நிருபர்களோ மற்ற பொறுப்பு வகிப்பவர்களோ, எந்த உள்நோக்கத்துடனும் சுயலாபத்திற்காக தவறாக செயல்பட நிர்வாகம் அனுமதிக்காது. மேலும் மீறி செயல்படுபவர்கள் நீக்கப்படுவார்கள். மற்றும் சட்டப்படி நடவடிக்கையும் எடுக்கப்படும். -நிர்வாகம்.

*ஆசிரியர் / வெளியீட்டாளர்:* K.மணிகண்டன் B.Com.,

இதழின் அனைத்து வழக்குகளும் சென்னை பெருநகர நீதிமன்ற எல்லைக்குட்பட்டது.



## "ஸ்டார் 2.0" கட்டணமின்றி வில்லங்க சான்றுகளை பதிவிறக்கம் செய்யலாம்

→ பக்கம் : 5

## முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டி நிறைவு விழா: முதல்வர் பரிசு வழங்கினார்

→ பக்கம் : 8

## திமுகவின் 2-வது பெட்டி நிறைய ஆவணங்கள் கவர்னரிடம் ஒப்படைத்த அண்ணாமலை

→ பக்கம் : 12

## தண்ணீரின்றி கருகிய பயிர்கள் கால்நடைகளுக்கு உணவாகிறது

→ பக்கம் : 13

## குளித்தலையில் மணல் மாஃபியாக்களை ஒழித்த கரூர் மாவட்ட எஸ்.பி. சுந்தரவதனம் ஐ.பி.எஸ்.

→ பக்கம் : 18

## ஆசிரியர் பணியிடங்கள் மிக விரைவில் நிரப்பப்படும்

→ பக்கம் : 19

## தக்காளி விலையேற்றம்! மக்கள் ஏமாற்றம்!!

→ பக்கம் : 26

## பூமிதான நிலத்தில் மண்ணை திருடிவிற்ற கிராம நிர்வாக அதிகாரி!

→ பக்கம் : 29



# கலைஞரைப் போலவே முதல் விதையை தர்மபுரியில் விதைத்த முதல்வர்



கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்ட முகாமையும், விண்ணப்ப படிவம் வழங்கும் பணியையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த 24 ஜூலை 2023 அன்று தர்மபுரி மாவட்டத்தில் தொடங்கி வைத்தார். ஏன் தர்மபுரியில் இந்த விழா நடைபெறுகிறது என்பதையும் அவர் அந்நிகழ்ச்சியில் விளக்கி பேசினார்.


தமிழ்நாடு அரசு சார்பில் மாதந்தோறும் குடும்பத் தலைவிகளுக்கு ரூ. 1000 உரிமைத் தொகை தரும் திட்டம் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் என்ற பெயரில் செப்டம்பர் 15ம் தேதி முதல் வழங்கப்படவுள்ளது.

இதற்கான முகாமை தர்மபுரி மாவட்டம் தொப்பூரில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் முதல்வர் மு.க.ஸ்டாலின்தொடங்கிவைத்தார்.விண்ணப்பங்களை பதிவு செய்யும் முகாமைத் தொடங்கி வைத்த ஸ்டாலின் அவர்கள் அந்த விண்ணப்பங்களை பயோ மெட்ரிக் முறையில் பதிவு செய்யும் பணியையும் ஆய்வு செய்தார்.

தமிழ்நாடு முழுவதும் மொத்தம் 36,000 முகாம்கள் அமைக்கப்பட்டு அங்கு விண்ணப்பங்களைப் பதிவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முன்னதாக முகாமைத் தொடங்கி வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் விண்ணப்பங்கள் வழங்க வந்த பெண்களிடம் உரையாடினார். மகளிர் சுய உதவிக் குழுக்களில் யார் யார் இருக்கீங்க என்றும் கேட்டார். அதனால் பலன் இருக்கிறதா என்றும் கேட்டறிந்தார். அப்போது லட்சுமி என்ற பெண், மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி அவர்கள்தான் தர்மபுரி மாவட்டத்தில் முதல் முறையாக மகளிர் சுய உதவிக் குழுவைத் தொடங்கினார் என்பதை நினைவு கூறிப் பேசினார். இதைக் கேட்ட முதல்வர் ஸ்டாலின் அவர்கள் அந்தப் பெண்ணை பாராட்டி நன்றி தெரிவித்தார்.

பின்னர் முதல்வர் பேசுகையில், 34 ஆண்டுகளுக்கு முன்பு 1989ம் ஆண்டு இதே தர்மபுரி மாவட்டத்தில்தான் மகளிர் சுய உதவிக் குழு என்ற அற்புதமான அமைப்பை மறைந்த முதல்வர் கருணாநிதி தொடங்கி வைத்தார். தமிழ்நாட்டுபெண்கள்,தன்னம்பிக்கையோடுவாழ்ந்திட வேண்டும், சுயமரியாதை உணர்வோடு வாழ்ந்திட வேண்டும் யாருடைய தயவையும் எதிர்பார்க்காமல் சொந்தக் காலில் நிற்க வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்ட திட்டம்தான் மகளிர் சுய உதவிக் குழுத் திட்டம். ஏழை எளிய மகளிரைக் கொண்டு இந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் முதன் முதலில் தொடங்கப்பட்டது. அன்று கருணாநிதி விதைத்த விதைதான் இன்று மாபெரும் திட்டமாக தமிழ்நாடு முழுவதும் தழைத்து வளர்ந்து லட்சக்கணக்கான பெண்களின் வாழ்க்கையில் ஒளியேற்றி வைத்துள்ளது. தமிழ்நாடு முழுவதும் கணக்கெடுத்துப் பார்த்தால் நான்கு லட்சத்து 57,000 குழுக்கள் இயங்கிக் கொணடுள்ளன.

அப்படிப்பட்ட அற்புதமான திட்டத்துக்கு விதை போட்ட மண்தான் இந்த தர்மபுரி மண். தர்மபுரியில் விதைத்தால் தமிழ்நாடு முழுக்க விளையும் என்பதால்தான் இங்கு வந்து தொடங்கியிருக்கிறோம். கோடிக்கணக்கான மகளிருக்கு உதவி செய்ய வேண்டும் என்பதற்காக நிதிச் சுமையைக் கருத்தில் கொள்ளாமல் கையெழுத்து போட்டேன் என்று கூறினார் முதல்வர்மு.க.ஸ்டாலின்.இந்நிகழ்ச்சியில்அமைச்சர்கள் கே. என். நேரு, எம்.ஆர்.கே. பழனிச்சாமி, தர்மபுரி எம்.பி. செந்தில்குமார், பாமக அவைத் தலைவர் ஜி.கே. மணி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




# “ஸ்டார் 2.0” கட்டணமின்றி வில்லங்க சான்றுகளை பதிவிறக்கம் செய்யலாம்

தமிழ்நாடு வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: பதிவுத்துறையில் முன்னோடி திட்டமாக 06.02.2000 முதல் அறிமுகப்படுத்தப்பட்ட ‘ஸ்டார்’ திட்டம் 2018 முதல் புதிய பரிணாமத்தில் ‘ஸ்டார் 2.0’ திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு பதிவுத்துறையில் அனைத்து சேவைகளும் இணையதளம் வாயிலாக வழங்கப்பட்டு வருகின்றன.

1975 ஆண்டு முதல் தற்போது வரையிலான காலத்திற்குரிய அட்டவணைமிமி பதிவேடு கணினிமயமாக்கப்பட்டு வில்லங்க சான்றுகளை இணையவழியில் பதிவிறக்கம் செய்து வருகின்றனர்.

பொதுமக்கள் 2021–2022ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் இந்த வசதி, 01.01.1950 முதல் பதியப்பட்ட அனைத்து ஆவணங்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என்ற அறிவிப்பிற்கிணங்க 01.01.1950 முதல் 31.12.1974 வரையிலான காலத்திற்குரிய வில்லங்கச் சான்றுகளை இணைய வழியில் பொதுமக்கள் பார்வையிடவும் மற்றும் பதிவிறக்கம் செய்ய ஏதுவாகவும் மேற்கண்ட காலத்திற்கான அட்டவணை II பதிவேட்டினை ரூ.36.58 கோடி மதிப்பீட்டில் கணினியில் மேலேற்றம் செய்வதற்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு அளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இப்பணி முடிவடைந்தவுடன் 1950 முதல் இன்றைய நாள்வரையிலான வில்லங்க சான்றுகளை பொதுமக்கள் இணையதள வாயிலாக பார்வையிடவும், அதன் பிரதிகளை கட்டணம் ஏதுமின்றி பதிவிறக்கம் செய்து கொள்ளவும் இயலும். இவ்வாறு வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் தெரிவித்துள்ளார்.

## குழந்தைகளின் படிப்பில் கவனம் செலுத்த வேண்டும்: விஜயகாந்த் கோரிக்கை

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது: மதுபானங்களுக்கான விலையை உயர்த்துவது, டாஸ்மாக் விற்பனையில் மும்முரம் காட்டும் தமிழக அரசு, பள்ளி குழந்தைகளின் விவகாரத்தில் மெத்தனம்காட்டுவதைவன்மையாககண்டிக்கிறேன். சுமார் 200 குழந்தைகளின் படிப்பையும் எதிர்காலத்தையும் கருத்தில் கொண்டு தென்காசி மாவட்டம் வி.கே.புதூர் தாலுகாவில் அச்சங்குன்றம் கிராமத்தில் பள்ளிக்கூடம் கட்ட தமிழக அரசு உடனடியாக அனுமதி அளிக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



# கர்நாடக எல்லையோர மாவட்டங்களில் கடத்தல்! ரேசில் முந்தும் ரேசன் அரிசி

கர்நாடக எல்லையோர மாவட்டங்களாக விளங்குபவை தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள் ஆகும்.

கர்நாடகத்தின் தொழில் நகரமாக விளங்கும் பெங்களூர் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் அதிகமாக தமிழர்கள் இந்த மாவட்டங்களில் இருந்து தான் வழக்கமாக சென்று வருகின்றனர் பெரும்பாலான தமிழர்கள் அப்பகுதியிலேயே குடியிருந்து தொழில் செய்து வருகின்றனர்.

இங்கு தமிழர்கள் சாதாரணமாக சென்று வரும் இந்த சூழ்நிலையை பயன்படுத்தி இப்பகுதியில் இருந்து ரேஷன் அரிசிகளை அதிகமாக கடத்துவது தொடர்ந்து கொண்டுள்ளது.

தருமபுரி மாவட்டத்தில் தொடர்ந்து கர்நாடகாவிற்கு ரேஷன் அரிசி கடத்துவதாக குடிமை பொருள் குற்றப்புலனாய்வு போலீசாருக்கு கடந்த பிப்ரவரி 2023ல் வந்த தகவலின் பேரில் மதிகோன்பாளையம் பகுதியில் சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது ரைஸ் மில் ஒன்றில் ரேஷன் அரிசியை பதுக்கி வைத்து அங்கிருந்து வெளி மாநிலங்களுக்கு கடத்திய போது கடந்த 05.03.2023ம் தேதி போலீசார் கையும் களவுமாக 2 பேரை பிடித்தனர்.

ஆனால், அரிசி கடத்திய 2 குற்றவாளிகளும் தப்பி ஓடி விட்டனர். இதனை அடுத்து அப்போதைய குடிமை பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வு துறை கூடுதல் காவல் இயக்குநர் அருண், உத்திரவுப்படி கோவை மண்டல காவல் கண்காணிப்பாளர் பாலாஜி, மேற்பார்வையில், தலைமறைவான குற்றவாளிகளை தேடிவந்தனர்.

தருமபுரி குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வு துறை காவல் உதவி ஆய்வாளர் மோகன் தலைமையில் காவலர்கள் சக்திவேல் முருகன், வேணுகோபால், கோவிந்தன் ஆகியோர் அடங்கிய குழு தேடி வந்த நிலையில் தருமபுரி அடுத்த எஸ்.கொட்டாவூர் பகுதியைச் சேர்ந்த ராமன் மகன் மணி (எ) கவுண்டமணி (30), மற்றும் தருமபுரி சித்தன் கொட்டாய் பகுதியைச் சேர்ந்த சின்னப்பையன் மகன் மாதேஷ் (எ) சின்னப்பையன் (26) ஆகியோரை போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த 2022ம் வருடத்தில், 283 பேரை போலீசார் கைது செய்யப்பட்டு 505 டன் ரேஷன் அரிசி மற்றும் 96 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, பறிமுதல் செய்யப்பட்ட அரிசியின் மதிப்பு ரூ.29 லட்சத்து 5 ஆயிரத்து 438 ஆகும். இது குறித்து 230 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 283 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட லாரி மற்றும் கார்கள் 79, இருசக்கர வாகனங்கள் 17 என மொத்தம் 96 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்களின் மதிப்பு ஒரு கோடியே 34 லட்சத்து 40 ஆயிரம் ஆகும். தமிழக அரசு பொது விநியோகத் திட்டம் மற்றும் சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் மூலம், குடும்ப அட்டைதாரர்களுக்கு ரேஷன் கடைகள் மூலம், அத்தியாவசியப் பொருட்களை விநியோகம் செய்து

வருகிறது.

இவ்வாறு விநியோகம் செய்யப்படும் பொருட்களை சிலர் முறைகேடாக கடத்தி, கள்ளச்சந்தையில் விற்று அதிக லாபம் ஈட்டும் நோக்கத்துடன் செயல்பட்டு வருதாக குற்றாச்சாட்டு எழுந்தது.

இதையடுத்து உணவு பொருள் கடத்தல் தடுப்பு பிரிவு போலீசார் மற்றும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையினர் தொடர்ந்து ரோந்து பணியில் ஈபட்டு வருகின்றனர்.

அத்தியாவசிய பண்டங்கள் கடத்தல் மற்றும் பதுக்கலில் ஈடுபடும் நபர்கள், அவர்களுக்கு உடந்தையாக செயல்படும் நபர்கள் மீது இன்றியமையாப் பண்டங்கள் சட்டம் 1955ன் படி, வழக்கு பதிவு செய்து மேல்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தொடர் குற்றச்செயல்களில் ஈடுபடும் நபர்களை, கள்ளச்சந்தை தடுப்பு மற்றும் இன்றியமையாப் பண்டங்கள் வழங்கல் பராமரிப்பு சட்டம் 1980ன் படி, குண்டர் சட்டத்தின் கீழ் கைது செய்யும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் உணவு பொருள் கடத்தல் தடுப்பு பிரிவு போலீஸ் ஏடிஎஸ்பி அருண் உத்தரவின் பேரில், எஸ்பி பாலாஜி மேற்பார்வையில், டிஎஸ்பி விஜயகுமார் தலைமையில், கிருஷ்ணகிரி மாவட்ட இன்ஸ்பெக்டர் ரேணுகாதேவி மற்றும் போலீசார், மாவட்ட, மாநில எல்லைகளான ஒப்பதவாடி, வரமலைகுண்டா, காளிக்கோயில், வேப்பனஹள்ளி, தீர்த்தம், அந்திவாடி, ஜூஜூவாடி, டிவிஎஸ் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள சோதனை சாவடிகளிலும், தேன்கனிக்கோட்டை, ராயக்கோட்டை உள்ளிட்ட பகுதிகளிலும், சாலைகளின் முக்கிய சந்திப்புகளிலும் அதிரடி வாகன தணிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் பின்னரும், ஜூன் 23 2023 அன்று கிருஷ்ணகிரியில், மாவட்ட பறக்கும் படை தாசில்தார் இளங்கோ தலைமையிலான வருவாய்துறை அதிகாரிகள் கிருஷ்ணகிரி ஒசூர் தேசிய நெடுஞ் சாலையில் வாகன தணிக்கை மேற்கொண்டிருந்த பொழுது அங்கு வந்த ஒரு கண்டெய்னர் லாரியை சோதனையிட்டு, 25 கிலோ மூட்டைகளில் கடத்திவரப்பட்ட 15 டன் ரேஷன் அரிசியை பறிமுதல் செய்ததோடு, அந்த கண்டெய்னர் லாரியை ஒட்டி வந்த திருவண்ணாமலை மாவட்டம் மேல்செகத்தைச் சார்ந்த கருணாகரன் 37 என்பவரை கைது செய்தனர். மேலும் இதை கடத்தி வந்த ஏஜென்ட்களை தேடி வருகின்றனர்.

இதுபோன்று குடிமை பொருள் வழங்கல் தடுப்பு அதிகாரிகள் மற்றும் போலீசார் ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து ரேஷன் அரிசி கடத்துபவர்களை பிடிக்கிறார்கள், கைது செய்கிறார்கள்.

பெரும்பாலும் இந்த ரேஷன் அரிசி கடத்தல் கர்நாடக எல்லையோரம் அமைந்துள்ள திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தர்மபுரி போன்ற மாவட்டங்களில் தான் அதிகமான அளவில் நடப்பதாக தகவல்கள் வருகின்றன.

இந்த ரேஷன் அரிசி கடத்தல்தாரர்கள் தாங்கள் ரேஷன்அரிசியை கடத்துவதற்கு பயன்படுத்தும் எந்த ஒரு மார்க்கத்தையும் விட்டு விடுவதில்லை. கடத்தல்காரர்கள் ரயில், பேருந்துகள், கனரக, இலகுரக வாகனங்கள் மற்றும் இருசக்கர வாகனங்கள் உள்பட அனைத்து மார்க்கத்திலும் இந்த ரேஷன் அரிசியை கடத்துகிறார்கள் என்பது கண்கூடு

ஆனால், இந்த ரேஷன் அரிசி கடத்தல் ஒவ்வொரு ஆண்டும் இம்மியளவேனும் குறையாமல் அதிகப்பட்டு கொண்டு தான் வருகிறதே தவிர கடத்தலின் எண்ணிக்கை குறையவில்லை. பின் நடவடிக்கை எடுத்து என்ன பயன்?

இவர்களுக்கு ரேஷன் அரிசி எங்கிருந்து வருகிறது. ரேஷன் கடை ஊழியர்கள் மூலமா? இல்லை பொதுமக்கள் மூலமா? இந்த ரேஷன் அரிசி கடத்தல்காரர்களுக்கு ரேஷன் அரிசி ரேசன் கடை ஊழியர்கள் மூலம் கிடைக்கிறது என்றால் ஊழியர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கலாமே?

இல்லை பொதுமக்கள் மூலம் கிடைக்கிறது என்றால் அவ்வாறுரேஷன்அரிசியைவிற்கும்அட்டைதாரர்களின் அட்டைகளை பறிமுதல் செய்ய நடவடிக்கை எடுக்கலாமே? இதை விட்டுவிட்டு நடவடிக்கை எடுப்பதன் மூலம் ஒரு பயனும் இல்லாத நிலையில் ரேஷன் அரிசி கடத்துபவர்களின்மீது எடுக்கும் நடவடிக்கையை ரேஷன் அரிசியை அவர்களுக்கு விற்பவர்கள் மீதும் எடுக்க வேண்டும் அல்லவா? என்பது அன்றாட தினசரி செய்திகள் மூலம் இந்த ரேஷன் அரிசி கடத்தலை பற்றிய செய்திகளை படிக்கும் பொது மக்களின் கேள்வியாக உள்ளது. அரசு ஆலோசிக்குமா?




# முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டி நிறைவு விழா

## முதல்வர் பரிசுக்கோப்பை மற்றும் பரிசுகளை வழங்கினார்

சென்னை. ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டரங்கத்தில் ''முதலமைச்சர் கோப்பை 2023'' மாநில அளவிலான போட்டிகள் நிறைவு விழா நடைபெற்றது.விழாவிற்குமுதலமைச்சர்மு.க.ஸ்டாலின் தலைமை தாங்கினார்.

அதிக பதக்கங்களை வென்று பதக்கப் பட்டியலில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாவட்ட அணிகளுக்கு பரிசுக் கோப்பைகளையும், 27வது தேசிய மகளிர் கால்பந்து போட்டிகளில் தங்கப்பதக்கம் வென்ற தமிழ்நாடு அணியைச் சார்ந்த 22 வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகையாக 60 இலட்சம் ரூபாய்க்கான காசோலையையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் நமது பாரம்பரிய விளையாட்டான கபடி, சிலம்பம் உட்பட 15விளையாட்டுகளையும்,பள்ளி,கல்லூரி,பொதுப்பிரிவு, அரசு ஊழியர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கும் இப்போட்டிகளை நடத்திட தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவிட்டார்.

இரண்டாம் பரிசு பெற்ற செங்கல்பட்டு அணிக்கு பரிசுக்கோப்பை வழங்கிய முதலமைச்சர். அதன் அடிப்படையில் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் வாரத்தில் தொடங்கி மார்ச் மாதம் முடிய நடைபெற்றது.

இந்த மாவட்ட அளவிலான போட்டிகளில் 3,76,000 க்கும் மேற்பட்ட வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் கலந்துகொண்டனர்.மாவட்டஅளவிலானபோட்டிகளில் வெற்றி பெற்ற 27,000க்கும் மேற்பட்ட வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள தேர்வு செய்யப்பட்டனர். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் முதலமைச்சர் கோப்பை மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் சென்னையில் ஜூலை 1ந் தேதி முதல் ஜூலை மாதம் 25ந் தேதி வரை 17 இடங்களில் நடத்தப்பட்டது.

மாநில அளவிலான இறுதிப் போட்டிகளில் தமிழ்நாட்டிலுள்ள 38 மாவட்டங்களை சேர்ந்த 27,000 க்கும் மேற்பட்ட வீரர்வீராங்கனைகள் பங்கேற்று விளையாடினர். மூன்றாம் இடம்பிடித்த கோவை அணிக்கு பரிசுக்கோப்பை வழங்கிய முதலமைச்சர்.

இதில் சென்னை மாவட்டம், 61 தங்கம், 33 வெள்ளி




மற்றும் 19 வெண்கலப் பதக்கங்கள் வென்று பதக்கப் பட்டியலில் முதல் இடத்தையும், செங்கல்பட்டு மாவட்டம், 18 தங்கம், 19 வெள்ளி மற்றும் 18 வெண்கலப் பதக்கங்கள் வென்று இரண்டாம் இடத்தையும், கோயம்புத்தூர் மாவட்டம் 15 தங்கம், 13 வெள்ளி மற்றும் 24 வெண்கலப் பதக்கங்கள் வென்று மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் “முதலமைச்சர் கோப்பை – 2023”ல் முதல் மூன்று இடங்களை பெற்ற சென்னை, செங்கல்பட்டு. கோயம்புத்தூர் ஆகிய மாவட்ட அணிகளுக்கு பரிசுக் கோப்பைகளை வழங்கி பாராட்டினார்.

இப்பரிசுக் கோப்பைகளை முதலிடத்தை பெற்ற சென்னை மாவட்ட அணியின் சார்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் மு. அருணா, இரண்டாமிடத்தை பெற்ற செங்கல்பட்டு மாவட்ட அணியின் சார்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் ஆ.ர. ராகுல்நாத், மூன்றாமிடத்தை பெற்ற கோயம்புத்தூர் மாவட்ட அணியின் சார்பாக கோயம்புத்தூர் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் இணை இயக்குநர் / திட்ட இயக்குநர் கே. செல்வம், மற்றும் விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகள், மாவட்ட விளையாட்டு அலுவலர்கள், பயிற்சியாளர்கள் பெற்று கொண்டார்கள்.

அதனைத்தொடர்ந்து,பஞ்சாப்மாநிலம்,அமிர்தசரஸில் ஜூன் 12 முதல் 28 வரை நடைபெற்ற 27வது தேசிய சீனியர் மகளிர் கால்பந்து சாம்பியன்ஷிப் 2023 போட்டியில், முதலிடம் பெற்று தங்கப் கோப்பையை வென்று சாதனை படைத்த தமிழ்நாடு அணியை சார்ந்த டி.தேவி. என்.சௌமியா, பி. தனலட்சுமி, எஸ். கௌசல்யா. என்.லாவண்யா. எம்.பவித்ரா. பி.துர்கா. எஸ்.சண்முகப்பிரியா, எம்.சுபாஷினி, எம். பரமேஸ்வரி, எஸ். பிரியதர்ஷினி, எம்.மாளவிகா, எம்.நந்தினி, ஏ. கார்த்திகா, கே. இந்துமதி, ஆர். வினோதினி, எஸ். ஐஸ்வர்யா, ஆர். சந்தியா, பி.சந்தியா, எஸ். சண்முகப்பி ரியா, ஆர். யுவராணி, என். அம்சவள்ளி ஆகிய 22 வீராங்கனைகளுக்கு, தமிழ்நாடு அரசின் சார்பில் 55 இலட்சம்ரூபாயும்,தமிழ்நாடுசாம்பியன்ஸ்அறக்கட்டளை (TN Champions Foundation) சார்பில் 5 இலட்சம் ரூபாயும், என மொத்தம் 60 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை உயரிய ஊக்கத்தொகையாக முதலமைச்சர் வழங்கினார்.

விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில், தமிழ்நாடு அரசின் சார்பில் கடந்த 26.6.2021 முதல் 12.07.2023 வரை சர்வதேச மற்றும் தேசிய அளவிலான பல்வேறு விளையாட்டு போட்டிகளில் பதக்கங்கள் வென்ற 1684 விளையாட்டு வீரர்களுக்கு 49 கோடியே 15 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் உயரிய ஊக்கத் தொகையாக தமிழ்நாடு முதலமைச்சரால் வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.




இந்த நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநாகராட்சி மேயர் ஆர்.பிரியா,பாராளுளுமன்ற,சட்டமன்றஉறுப்பினர்கள், துணை மேயர் மு. மகேஷ் குமார், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# அன்புமணி அரெஸ்ட்டும் ஆத்திரத்தில் தொண்டர்களும்

கடந்த 28.7.2023 அன்று என்எல்சியை முற்றுகையிட்டு பாமக போராட்டம் நடத்தியது. அக்கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் கைது செய்யப்பட்டார்.

இதைத்தொடர்ந்து அங்கு நடத்தப்பட்ட கல்வீச்சு தாக்குதலில் காவல்துறையினர் உள்ளிட்ட பலர் காயமடைந்தனர். கலவரத்தைக் கட்டுப்படுத்த போலீஸார், தடியடி, கண்ணீர் புகை குண்டுகளையும் பயன்படுத்தினர்.

மேலும், தண்ணீர் பீய்ச்சி அடித்து கூட்டத்தைக் கலைக்க முயன்ற போலீஸார், வானை நோக்கி துப்பாக்கியால் சுட்டு கூட்டத்தை கலைத்தனர்.

கடலூர் மாவட்டம், நெய்வேலியில் செயல்பட்டு வரும் மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனமான நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில், சுமார் 20,000க்கும் மேற்பட்டவர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

இங்கு உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை தமிழகம், புதுச்சேரி, கேரளா, கர்நாடகா, ஆந்திரா, தெலங்கானா உள்ளிட்ட மாநிலங்களுக்கு விநியோகம் செய்யும் என்.எல்.சி நிர்வாகம், தமிழக அரசுக்கு மட்டும் குறைந்த கட்டணத்தில் கொடுத்து வருகிறது.

இந்த நிலையில் நிலக்கரி எடுப்பதற்குப் போதுமான நிலம் இல்லாததால், இரண்டாவது சுரங்க விரிவாக்கத்துக்காக மேல் வளையமாதேவி, கரிவெட்டி, கத்தாழைப் பகுதிகளில் 2006 –2013 காலகட்டங்களில் கையகப்படுத்திய நிலங்களில் கடந்த 26ம் தேதி பணியைத் தொடங்கியது என்.எல்.சி நிர்வாகம்.

என்.எல்.சி சுரங்க நீரை வெளியேற்ற புதிய பரவனாறு அமைக்கும் அந்தப் பணிக்காக, நிலங்களில் சாகுபடி செய்யப்பட்டிருந்த விவசாயப் பயிர்கள் ஜே.சி.பி இயந்திரங்கள் மூலம் அகற்றப்பட்டு, கால்வாய் தோண்டப்பட்டது. அதற்கு விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்த நிலையில், போலீஸார் பாதுகாப்புடன் பணியைத் தொடர்ந்தது என்.எல்.சி நிர்வாகம்.

குறித்து செய்தியாளர்களிடம், கடலூர் மாவட்ட ஆட்சியர் அருண் தம்புராஜ், ‘‘என்.எல்.சி நிர்வாகம் தற்போது பணியைத் தொடங்கியிருக்கும் அந்த நிலங்கள் 2006 – 2013 ஆண்டுகளில் கையகப்படுத்தப்பட்டதுதான். நிலத்துக்கான தொகையைவழங்கிவிட்டபிறகும்,நிலஉரிமையாளர்கள் அதில் விவசாயம் செய்துவந்தனர். சுரங்கப் பணிகள் நடக்கும்போது அந்த நிலங்களைக் கையகப்படுத்தலாம் என்று நினைத்த என்.எல்.சி நிர்வாகம், கருணை அடிப்படையில் அந்த விவசாயிகள் விவசாயம் செய்ததைத் தடை செய்யவில்லை.

கடந்த 10, 15 வருடங்களாக அந்த நிலங்கள் விவசாயிகளின் அனுபவத்தில்தான் இருந்துவருகிறது. அப்போதே முழுமையாகக் கையப்படுத்தியிருந்தால் இப்போது இவ்வளவு பிரச்னை ஏற்பட்டிருக்காது. தற்போதுபுதிதாகக்கையகப்படுத்தப்படும்இடங்களுக்கு அதிக இழப்பீடு வழங்கும்போது, ஏக்கத்துடன்

தங்களுக்கும் அதே இழப்பீட்டை வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கிறார்கள். அந்தக் கோரிக்கையையும் கருத்தில் கொண்டு, கருணைத் தொகையை கூடுதலாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டது. அதற்குச் சட்டத்தில் இடம் இல்லாவிட்டாலும் முன்பு வழங்கப்பட்ட தொகையை மூன்று மடங்காக உயர்த்தி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. 10 வருடங்களுக்கு முன்பு ரூ.6 லட்சத்துக்கு நிலங்களை விற்றவருக்கு தற்போது ரூ.18 லட்சம் வழங்கப்படுகிறது. இருபது ஆண்டுகளுக்குப் பிறகு விற்ற நிலங்களுக்கு தற்போது கருணைத்தொகை வழங்கப்படுவதெல்லாம் பெரிய விஷயம்.

அதை விவசாயிகளுக்கும் தெரிவித்துவிட்டோம். மேல்வளையமாதேவியில் வெறும் 30 ஹெக்டேர் நிலத்தில்தான் தற்போது பணி தொடங்கப்பட்டிருக்கிறது.

அதில் 72 பட்டாதாரர்கள் இருக்கிறார்கள். அதில் 65 பேர் இழப்பீட்டுத்தொகையையும் வாங்கிவிட்டார்கள். சிலர் ஏக்கருக்கு ரூ.25 லட்சம் வரையில் இழப்பீடு வாங்கியிருக்கிறார்கள். அதில் நீதிமன்றம் சென்ற மற்றவர்களுக்கு மட்டும்தான் இழப்பீடு வழங்கவில்லை. அவர்களுக்கும் லோக் அதாலத் மூலம் அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. அந்த 30 ஹெக்டேர் இடத்தில் பணி தொடங்கவிருப்பதால் பயிர் வைக்காதீர்கள் என்று விவசாயிகளுக்கு முன்பே கூறப்பட்டுவிட்டது. அதையும் மீறி அவர்கள் பயிர் வைத்துவிட்டார்கள். ஆனாலும் அந்தப் பயிர் சேதாரத்துக்கும் இழப்பீடு வழங்குவதாகத் தெரிவித்துவிட்டோம் '' என்றார்.

ஆனால்,விவசாயநிலங்களில்ஜே.சி.பிஇயந்திரத்தை இறக்கியதற்கு அனைத்துக் கட்சித் தலைவர்களும் கண்டனம் தெரிவித்ததையடுத்து, என்.எல்.சிக்கு எதிராக இன்று போராட்டம் நடத்தப்படும் என்று அறிவித்திருந்தார் பா.ம.க தலைவர் அன்புமணி ராமதாஸ்.

அதற்காக8072023அன்றுகாலை10மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 2,000 போலீஸார் நெய்வேலியில் குவிக்கப்பட்டனர். அத்துடன் நெய்வேலி நுழைவுவாயிலை சீல் வைத்ததுடன், வஜ்ரா வாகனங்களும் தயாராக நிறுத்தப்பட்டிருந்தன. அதையடுத்து, மதியம் 12 மணியளவில் போராட்ட மேடைக்கு வந்த அன்புமணி ராமதாஸ், ``தனியாருக்கு விற்கப்படவிருக்கும் என்.எல்.சிக்காக தமிழக அரசு ஏன் நிலங்களைக் கையகப்படுத்திக் கொடுக்க வேண்டும்... அது அரசின் வேலை கிடையாது. மீண்டும் தமிழக அரசை எச்சரிக்கிறோம். நிறுத்திக்கொள்ளுங்கள். இனி ஒரு பிடி மண்ணைக்கூட கையகப்படுத்தக் கூடாது. இதுவரை கையகப்படுத்திய நிலங்களை மீண்டும் விவசாயிகளிடம் ஒப்படையுங்கள்'' என்று பேசிவிட்டு கீழே இறங்கியவர், தொண்டர்களுடன் என்.எல்.சி அலுவலகத்துக்குள் தடையை மீறி நுழைய முயற்சி செய்தார்.

அப்போது அங்கிருந்த போலீஸார் அவரைத் தடுக்க முயன்றனர். அப்போது பா.ம.கவைச் சேர்ந்தவர்கள் போலீஸார்மீது தண்ணீர் பாக்கெட்டை வீசியதுடன், போலீஸ் வாகனங்களை கல்வீசித் தாக்கினர். அதனால் போலீஸார் தடியடி நடத்த ஆரம்பித்தனர். ஆனால், அதன்பிறகும்போலீஸார்மீதுகல்வீச்சைத்தொடர்ந்தனர் பா.ம.கவினர். அதில் நெய்வேலி டவுன் இன்ஸ்பெக்டர் ஷாகுல் ஹமீதின் மண்டை உடைந்தது. அவர் உட்பட 12 போலீஸாருக்குக் காயம் ஏற்பட்டது. அதையடுத்து, வானத்தை நோக்கி கண்ணீர் புகைக்குண்டுகள் வீசப்பட்டன. அப்படியும் வன்முறையைக் கட்டுக்குள் கொண்டுவர முடியாததால், தடியடி நடத்தி கலவரத்தில் ஈடுபட்டவர்களைக் கைதுசெய்து வேனில் ஏற்றினர். அன்புமணி மற்றும் 500க்கும் மேற்பட்ட பா.ம.க நிர்வாகிகள் அங்கிருக்கும் தனியார் திருமண மண்டபத்தில் தங்கவைக்கப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டனர். இதனால் ஏற்பட்ட வன்முறை சுமார் ஒருமணிநேரத்திற்கு பிறகு கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

அன்புமணி கைதான தகவல் அறிந்தவுடன் தமிழ்நாட்டின் வட மாவட்டங்களான பாமக வலுவாக உள்ள காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருப்பத்தூர், தர்மபுரி ஆகிய பகுதிகளில் பாமக தொண்டர்கள் மறியல்களிலும், ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபடத் துவங்கினர். குறிப்பாக தர்மபுரி மாவட்டத்தில் மட்டும் பத்துக்கும் மேற்பட்ட இடங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

இந்த வன்முறையின் இரண்டு பெண் காவலர்கள், 19 ஆண் காவலர்கள், ஒரு என்எல்சி நிறுவனத்திற்கு பணியாற்றும் புகைப்பட கலைஞர் ஒருவர் என 22 பேர் காயமடைந்தனர். இவர்கள் என்எல்சிக்கு சொந்தமான மருத்துவ அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களை தமிழக டிஜிபி சங்கர் ஜிவால் நேரில் வந்து பார்வையிட்டு ஆறுதல் தெரிவித்து அவர்களுக்கு பழங்களை வழங்கினார். அப்போது கடலூர்,விழுப்புரம்,கள்ளக்குறிச்சி மாவட்ட எஸ்பிக்கள் மற்றும் கடலூர் மாவட்ட ஆட்சியர் உடன் இருந்தனர்.



# திமுகவின் 2-வது பெட்டி நிறைய ஆவணங்கள் கவர்னரிடம் ஒப்படைத்த அண்ணாமலை

தமிழக பாரதிய ஜனதா மாநில தலைவர் அண்ணாமலை கடந்த ஜூலை 26 அன்று கவர்னர் ஆர்.என்.ரவியை சந்தித்து பேசினார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், இன்று, தமிழக பாஜக மூத்த தலைவர்களுடன் தமிழக கவர்னர் ஆர்.என். ரவியை சந்தித்தோம். கவர்னரிடம், திமுக அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் திமுக குடும்பத்துடன் தொடர்புள்ள பினாமி தகவல்கள் அடங்கிய, திமுக ஃபைல்ஸ் பகுதி 2 ஆவணங்களையும், மேலும், ரூ.5600 கோடி மதிப்பிலான 3 ஊழல் குறித்த ஆதாரங்களையும் வழங்கி, இது தொடர்பாக அவர் தலையிட்டுதகுந்தநடவடிக்கைஎடுக்கவேண்டுமென்று கோரிக்கை விடுத்துள்ளோம் என கூறியுள்ளார்.

# உழவர்களின் கண்ணீரை துடைத்த இயற்கை அன்னை



பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

காவிரி பாசன மாவட்டங்களில் கருகும் நிலையில் உள்ள குறுவை நெற்பயிர்களை காப்பாற்ற முடியாமலேயே போய்விடுமோ? என்ற வேதனையில் உழன்று கொண்டிருந்த உழவர்களின் கண்ணீரை, பருவமழையைக் கொண்டு துடைத்திருக்கிறாள் இயற்கை அன்னை.

கர்நாடகத்தில் காவிரியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணைகளுக்கு வரும் நீரின் அளவு வினாடிக்கு ஒரு லட்சம் கன அடி என்ற அளவை தாண்டி விட்டது. கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை முதல் இன்று புதன்கிழமை காலை வரையிலான 3 நாட்களில் மட்டும் காவிரிஆற்றின்குறுக்கேகட்டப்பட்டுள்ளஅணைகளின் நீர்மட்டம் 22.85 டி.எம்.சி அதிகரித்திருக்கிறது.

நான்கு அணைகளின் மொத்த நீர் இருப்பு 78 டி.எம்.சியை தொட்டிருக்கிறது. கபினி, ஹாரங்கி ஆகிய அணைகள் நிரம்பி விட்ட நிலையில், அந்த அணைகளுக்கு வரும் தண்ணீர் முழுமையாக திறந்து விடப்படுகிறது.

மேகதாது அணை கட்டப்பட்டால், மொத்தக் கொள்ளளவு 181 டி.எம்.சியைக் கடந்து தமிழ்நாட்டுக்கு காவிரியில் கர்நாடகம் தண்ணீரை திறந்து விடுவது எல்லாம் அதிசயம் தான். அது எப்போதோ ஒரு முறை தான் நடக்கும். அதனால், மேகதாது அணை கட்டப்பட்டால் தமிழ்நாடு பாலைவனமாவதை தடுக்க முடியாது. அதனால், மேகதாது அணை விவகாரத்தில் தமிழ்நாடு அரசு கூடுதல் கவனத்துடன் செயல்பட வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.



# தண்ணீரின்றி கருகிய பயிர்கள் கால்நடைகளுக்கு உணவாகிறது

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி அருகே மேலபனையூர் ஊராட்சி கமலாபுரம் கிராமத்தில் 400 க்கும் மேற்பட்ட ஏக்கரில் குறுவை சாகுபடி செய்யப்பட்டுள்ளது.


இதில் நேரடி நெல் விதைப்பு மூலம் விவசாயிகள் சாகுபடி செய்துள்ளனர். மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டு 2 மாதங்கள் ஆகியும், இதுவரை இந்த பகுதிக்கு தண்ணீர் வரவில்லை. தண்ணீர் இன்றி நெற்பயிர்கள் கருகி வருகின்றன.

இதனால் மனமுடைந்த விவசாயிகள் தங்களது ஆடு, மாடுகளை வயல்களுக்கு கொண்டு வந்து, அவற்றை நெற்பயிர்களை மேயவிடும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது,

கமலாபுரம் கிராமத்தில் 400க்கும் மேற்பட்ட ஏக்கரில் குறுவை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்த விளைநிலங்கள் அய்யனாற்றில் இருந்து பிரிந்து கூழையாறில் வரும் தண்ணீர் மூலம் பாசன வசதி பெறுகின்றன.

இந்த கூழையாறு தூர்வாரப்படாததாலும் போதுமான அளவில் தண்ணீர் திறந்து விடாததாலும் கமலாபுரம் பகுதிக்கு தண்ணீர் வந்து சேரவில்லை. மேலும், மதகுகள் சீரமைக்கப்படாமல் உள்ளதால் கூழையாறில் இருந்து வரும் தண்ணீர் பொண்ணு கொண்டான் வடிகாலில் சென்று விடுகின்றன.



எங்கள் பகுதி விவசாயிகளுக்கு குறுவை சாகுபடி பல ஆண்டுகளாக எட்டாக்கனியாகி உள்ளது.இந்த ஆண்டு மேட்டூர் அணையில் இருந்து உரிய நேரத்தில் தண்ணீர் திறக்கப்பட்டதால் எங்கள் கிராமத்திற்கு காலத்தோடுதண்ணீர்வந்துவிடும்என்றநம்பிக்கையில் தான் குறுவை சாகுபடியை தொடங்கினோம்.

ஆனால் தண்ணீர் இன்றி பயிர்களை மேயவிட்டு கால்நடைகளுக்கு உணவாக்கும் அவலநிலை ஏற்படும் என நினைத்து கூட பார்க்கவில்லை. இதுகுறித்து கோரிக்கை விடுத்தும், எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதனால்வாழ்வாதாரம்பெரிதும்பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, பாதிக்கப்பட்ட நெற்பயிர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.



# வட மாநிலங்களில் பயனளித்த யாத்திரைகள்! தமிழகத்தில் பாஜகவிற்கு பயனளிக்குமா?

பாதயாத்திரை என்பது அரசியல்வாதிகள் அல்லது முக்கிய பிரமுகர்கள் சமூகத்தின் பல்வேறு பகுதியினருடன் மிகவும் நெருக்கமாகப் பழகுவதற்கும், அவர்களின் பிரச்சனைகளைப் பற்றி அறிவதற்கும், தங்களுடைய ஆதரவாளர்களை ஊக்கப்படுத்து வதற்கும் மேற்கொள்ளும் பயணமாகும். பாதயாத்திரை என்பது இந்து சமய யாத்திரைகளாகவும் புனித கோ யில்கள் அல்லது யாத்திரை ஸ்தலங்களை நோக்கிய நடைபயணமாகவும் மேற்கொள்ளப்படுகின்றது.

காந்தியடிகள் 1930இல் தண்டிக்கு தனது புகழ்பெற்ற உப்புச் சத்தியாக்கிரகத்துக்காக பாதயாத்திரை மேற்கொண்டார்.

1933–34 குளிர்காலத்தில், காந்தி தீண்டாமைக்கு எதிராக நாடு தழுவிய பாதயாத்திரை மேற்கொண்டார்.

காந்தியவாதி வினோபாபாவே 1951இல் தனது பூமிதான இயக்கத்தின் ஒரு பகுதியாக பாதயாத்திரையைத் தொடங்கினார். தெலங்காணா பகுதியில் தொடங்கி, வினோபாபாவே தனது பாதயாத்திரையை புத்தகயையில் முடித்தார்.

1982 ஆம் ஆண்டு தெலுங்குதேசம் கட்சி உருவான பிறகு என்டிஆர் சைதன்ய ரத யாத்திரையை மேற்கொண்டார். நடிகராக இருந்து அரசியல்வாதியாக மாறிய அவர், ஒன்பது மாதங்களில் நான்கு முறை மாநிலம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து, கிட்டத்தட்ட 40,000 கிமீ பயணம் செய்தார். இந்த யாத்திரை அவரை 1983 இல் அதிகாரத்திற்கு கொண்டு வந்தது.

1983சனவரி6அன்று,சந்திரசேகர்கன்னியாகுமரியில் இருந்துபாதயாத்திரையைத்தொடங்கினார்.மக்களுக்கு உள்ள பிரச்சனைகளைப் புரிந்து கொள்வதற்காக 1983 சூன் 25 வரை தனது 4,260 கிலோமீட்டர் (2,650 மைல்) பயணத்தை தில்லியில் உள்ள ராஜ்காட் வரை தொடர்ந்தார்.

1990 செப்டம்பர் 25 முதல் அக்டோபர் 30 வரை சோம்நாத் முதல் அயோத்தி வரை 10 மாநிலங்கள் வழியாக 10,000 கிலோமீட்டர் தூரம் ரத யாத்திரை அல்லது ரத ஊர்வலத்தை அத்வானி அறிவித்தார். இந்த யாத்திரை, 75,000 கரசேவகர்களுடன் யாத்திரை அயோத்தியை அடைந்தது. உத்தரபிரதேசத்தில் முலாயம் சிங் யாதவ் தலைமையிலான ஜனதா தள அரசு பாபர் மசூதியை பாதுகாக்க 20,000 போலீசாரை இடமாற்றம் செய்தது.

அப்போதைய உத்திர பிரதேசம் முதல்வர் முலாயம் சிங் யாதவ் தனது காவல்துறையை துப்பாக்கிச் சூடு நடத்த உத்தரவிட்டார், மேலும், பல கர சேவகர்கள் இறந்தனர், ஆனால் மசூதி அப்படியே இருந்தது. டிசம்பர் 6, 1992 அன்று, அது இல்லை. சங்பரிவார் ஆர்வலர்கள்

மற்றும் ஆதரவாளர்கள் 16 ஆம் நூற்றாண்டின் கட்டிடத்தை இடித்தார்கள். இருப்பினும் இந்த யாத்திரை அகில இந்திய அளவில் பல மாநிலங்களில் பாஜக வேரூன்ற உதவி புரிந்தது.

இதற்கு அடுத்த வருடமே சுமார் ஒரு லட்சம் பேர் பங்கேற்புடன்1991ல்ஏக்தாயாத்ராபிஜேபிதலைவர்முரளி மனோகர் ஜோஷிதலைமையில் நடத்தப்பட்டது. மற்றும் பிஜேபி தேசிய ஒற்றுமையை ஆதரித்தது மற்றும் பிரி வினைவாதஇயக்கங்களை எதிர்ப்பது குறித்த நோக்கம் கொண்டது . இது 1991 ஆம் ஆண்டு டிசம்பர் 11 ஆம் தேதி தமிழ்நாடு கன்னியாகுமரியில் சுப்ரமணிய பாரதியின் பிறந்தநாள் மற்றும் குரு தேக் பகதூரின் ‘பாலிதான் திவாஸ்’ ஆகியவற்றுடன் இணைந்து தொடங்கியது . யாத்திரை 14 மாநிலங்களுக்குச் சென்றது.

2011 ஏக்தா யாத்ராபாரதிய ஜனதா யுவ மோர்ச்சா, பாஜக இளைஞர் பிரிவு தேசியத் தலைவரும், நாடாளுமன்ற மக்களவை உறுப்பினருமான அனுராக் தாக்கூர் தலைமையில் நடைபெற்றது. 2011ஜனவரி 12 அன்று மேற்கு வங்காளத்தின் கொல்கத்தாவில் தொடங்கிய பேரணி, ஜார்கண்ட், பீகார், உத்தரப் பிரதேசம்,மகாராஷ்டிரா,மத்தியப்பிரதேசம்,ராஜஸ்தான், பஞ்சாப் மற்றும் ஹரியானா வழியாக பயணித்தது . ஏக்தா யாத்திரை 2011ஜனவரி 26ஆம் தேதி லால் சௌக்கில் கொடியேற்றத்துடன் முடிவடைந்தது.

ஒய். எஸ். ராஜசேகர ரெட்டி 1,475 கிமீ (917 மைல்) தொலைவை மூன்று மாத கால பாதயாத்திரையில் கடந்தார். அதில் ஆந்திரப் பிரதேசத்தின் பல மாவட்ட மக்களைச் சந்தித்தார். இந்த யாத்திரைக்குப் பிறகு 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் தெலுங்கானாவையும் உள்ளடக்கிய ஆந்திரப் பிரதேசத்தின் முதலமைச்சராக அவர் தனது கட்சியை வெற்றிப் பாதைக்கு வழிநடத்தியதாக அறியப்படுகிறது.

ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சி தலைவர் ஜெகன் மோகன் ரெட்டி தனது தந்தையின் சமாதியில் அஞ்சலி செலுத்திய பின்னர் தனது சொந்த மாவட்டமான கடப்பா மாவட்டத்தில் உள்ள ஆர். கே பள்ளத்தாக்கில் ‘ பிரஜா சங்கல்ப யாத்திரை ‘ என்ற பெயரில் தனது பாதயாத்திரையை தொடங்கினார். 430 நாட்களில் மாநிலத்தின் 13 மாவட்டங்களில், 125 சட்டமன்றத் தொகுதிகளில் நடந்த பாத யாத்திரையில் ஒய்.எஸ்.ஆர் காங்கிரசு கட்சியால் ‘‘ராவளி ஜெகன், காவலி ஜகன்’’ (ஜெகன் வர வேண்டும். ஜெகன் வேண்டும்) என்ற




முழக்கம் உருவாக்கபட்டது. இந்த யாத்திரை 2017. நவம்பர். 6 அன்று தொடங்கப்பட்டு 2019 சனவரி 9 அன்று நிறைவடைந்தது.

இந்திய தேசிய காங்கிரசு, இராகுல் காந்தியின் தலைமையில், இந்திய ஒற்றுமைப் பயணம் என்ற பாதயாத்திரையை 2022 செப்டம்பர் 7 அன்று இந்திய தீபகற்பத்தின் தென் முனையான கன்னியாகுமரியில் தொடங்கியது. இந்த பாத யாத்திரை ஐந்து மாதங்களில் சுமார் 3,570 கி.மீ. தொலைவுக்கு 12 மாநிலங்கள், இரண்டு ஒன்றிய ஆட்சிப் பகுதிகள் வழியாய் நடந்து காஷ்மீரில் முடிவடைந்தது.


திரிணாமுல் காங்கிரஸ் தலைவரும் மேற்கு வங்க முதல்வருமான மம்தா பானர்ஜி, மக்களிடம் நேராக செல்வதில் தயங்காததால், ‘தெருப் போராளி’ என்ற சிறப்புப் பெயரைப் பெற்றார். உண்மையில், 2011 ஆம் ஆண்டு வங்காளத்தில் அவரது பாதயாத்திரையானது, மாநிலத்தில் நீண்டகாலமாக வேரூன்றியிருந்த இடது முன்னணி அரசாங்கத்தை அவரது கட்சி தோற்கடிக்கச் செய்த காரணிகளில் ஒன்றாகும்.

இவ்வாறு அகில இந்திய அளவில் அநேகமாக அனைத்து கட்சிகளாலும் யாத்திரைகள் நடத்தப்பட்டுள்ளன. இந்த யாத்திரைகளில் பெரும்பாலான யாத்திரைகள், கட்சிகள் அல்லது இயக்கங்கள், தனது நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு காரணியாக இருந்துள்ளன.

இந்த யாத்திரைகளுக்கு தமிழகமும் விதிவிலக்கல்ல.

மதுவிலக்குக்கு எதிராக மதிமுக தலைவர் வைகோ அவர்கள் மேற்கொண்ட பாதயாத்திரை தமிழகத்தில் அவரை ஒரு நாயகன் என்னும் அளவிற்கு உயர்த்தியது.

பாஜகவின் முன்னாள் மாநில தலைவராக இருந்த சிபி ராதாகிருஷ்ணன் அவர்கள் நடத்திய தாமரை யாத்திரை பரவலாக தமிழகம் முழுவதும் பாஜகவை அறிமுகப்படுத்தியது.




பாஜகவின் முன்னாள் மத்திய மந்திரி பொன். ராதாகிருஷ்ணன்,

மகாத்மா காந்தி பிறந்தநாளை முன்னிட்டு 2019 அக்.2 முதல் 2019அக்.30 வரை பாத யாத்திரை மேற்கொண்டார். அதன் பின் பாஜகவின் மாநில தலைவராக இருந்து, தற்போதைய மத்திய அமைச்சராக உள்ள முருகன் அவர்களின் வேல் யாத்திரை பாஜகவை கட்டி தொட்டி எல்லாம் பேச வைத்தது.

தமிழ்நாடு பாஜக சார்பில் அதன் மாநில தலைவர் அண்ணாமலை அவர்கள் 'என் மண் என் மக்கள் யாத்திரை'யை 28ஜூலை 2023 மாலை துவங்கி நடத்தி வருகிறார். 168 நாட்கள் இந்த யாத்திரையை மேற்கொள்ள உள்ள இவர் ராமேஸ்வரம் முதல் சென்னை வரை பாதயாத்திரை செல்கிறார். பாஜகவை தமிழ்நாட்டில் வலிமைப்படுத்தும் நோக்கில் அண்ணாமலை இந்த பாத யாத்திரையை மேற்கொள்கிறார்.

இந்த நடைபயணத்தை மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்கள் தொடங்கி வைத்துள்ளார். அப்போது உலகின் பழமையான மொழியான தமிழில் பேச முடியாதற்கு மன்னிப்பு கேட்ட அவர் என் மண், என் மக்கள்... தொடங்கும் அண்ணாமலை பாதயாத்திரை... குடும்ப ஆட்சியை ஒழிப்பதற்காக என்றும், இந்த பாதயாத்திரை, வெறும் அரசியல் சார்ந்தது மட்டுமல்ல. உலகின் பழமையான தமிழ் மொழியை உலகம் முழுவதும் கொண்டு செல்லும் யாத்திரை என்றும் கூறி துவங்கி வைத்தார்.

தமிழகத்தின் கலசாரத்தை, பண்பாட்டினை காஷ்மீர் வரை எடுத்து செல்லும் யாத்திரை. தமிழர்கள் மட்டுமின்றி, நாட்டில் உள்ள 130 கோடி மக்களின் மனதிலும் மரியாதையை ஏற்படுத்தும் யாத்திரை.... இந்த நடைப்பயணம், ஊழல் பிடியில் சிக்கி இருக்கும் தமிழக மக்களை இந்த நடைப்பயணம் விடுவிக்கும் யாத்திரைஞ் என மேலும் தெரிவித்தார்.

பிரதமர் மோடியின் நம்பிக்கை கூறிய தளபதியாக கருதப்படும் அமித்ஷா தனது பேச்சில் பிரதமர் மோடி தமிழ் மொழியின் பழமையையும், சிறப்பையும் உலகின் பல மேடைகளில் முழங்கி வருகிறார்.

ஐக்கிய நாடுகள் அவையில் கூட தமிழின் பெருமையை பேசிய ஒரே தலைவர் மோடி மட்டும் தான். ஜி20 மாநாட்டின் முத்திரை வாசகம் கூட யாதும் ஊரே, யாவரும் கேளிர்.

திருக்குறள் தந்த வள்ளுவருக்கு சிலை நிறுவப்படும் என்று அறிவித்தவர் பிரதமர் மோடி. மகாகவி பாரதியாரின் பிறந்த நாளான டிசம்பர்21ம் தேதியை இந்திய தேசிய மொழிகள் தினம் என அறிவித்தவர் மோடி.

இலங்கையில் தமிழர்களின் நலனுக்காக ரூ.120 கோடி செலவில் கலாச்சார மையத்தை திறந்து வைத்தவர் மோடி என தெரிவித்தார்.

காசிதமிழ் சங்கமம், சவுராஸ்டிரா சங்கமம் மூலம் தமிழை இந்தியாவின் வடக்கிலும், மேற்கிலும் பரப்பி வருகிறார். பப்புவா நியூ கினியா நாட்டிற்கு சென்ற மோடி, அந்த நாட்டின் மொழியில் திருக்குறளை வெளி யிட்டார்.

தமிழின் வீர அடையாளமான செங்கோல், புதிய நாடாளுமன்றத்தில் நிறுவப்பட்டு உள்ளது. நாட்டில் மிகுந்த அக்கறை கொண்டவர் பிரதமர் மோடி'' என்றார். தமிழகத்தில் உள்ள 234 சட்டசபை தொகுதிக்கும்இந்தநடைபயணம்மூலம்அண்ணாமலை செல்கிறார். இந்த தொகுதிகள் முழுவதும் அவர் பிரதமர் மோடியின்செய்தியையும்,அவரின்நலத்திட்டங்களையும் சாதனைகளை மக்களுக்கு கொண்டு செல்வார் என்று கூறியுள்ள அமித்ஷாவின் தளபதியாக எதிர்காலத்தில் அண்ணாமலை உருவாக கூடும் என அரசியல் நோக்கங்கள் கூறுகிறார்கள்.

தாமரை யாத்திரை நடத்திய சி. பி. ராதாகிருஷ்ணன் துவங்கி கடந்த வேல் யாத்திரை முருகன் வரை எத்தனையோ பாஜக தலைவர்கள் யாத்திரை நடத்தினாலும் தமிழக வாக்காளர்கள் பாரதிய ஜனதா கட்சியை முழுமையாக ஆதரித்ததில்லை.

யாத்திரையின் நோக்கம் வெற்றி பெறுமானால் தமிழக அரசியலில் தேசிய நீரூற்றுக்கு மீண்டும் ஒரு வலிமையான விதையை விதைத்த பெருமைக்கு உரியவராக அண்ணாமலை மாறக்கூடும். இந்தக் கருத்துக்கு தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை அவர்களின் தளபதிகளான மாவட்ட தலைவர்கள் வலு சேர்ப்பார்களா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.



# ஐக்கிய தொழிற்சங்க காங்கிரஸின் (CUTU) தர்மபுரி மாவட்ட மாநாடு!



என். சரவணன்.
மாவட்ட தலைவர். UTUC.

ஐக்கிய தொழிற்சங்க காங்கிரஸ் என்னும் CUTU அமைப்பின் முதல் மாவட்ட மாநாடு தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளியில் உள்ள ஹரிஷ் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இதற்கு தா.மு. சண்முகம், எஸ். சரவணன், ஜி. மாதம்மாள் ஆகியோர் தலைமை தாங்கினார்.

மாநாட்டில்பின்வரும்தீர்மானங்கள்நிறைவேற்றப்பட்டன.

தர்மபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள கட்டுமானம் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர் நலவாரியத்தில், புற்றீசல்கள் போல் அதிகரிக்கும் தொழிற்சங்கங்கள் கட்டுமானம் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்கள் மத்தியில் பணம் பெறுவதையே நோக்கமாகக் கொண்டு செயல்படுவதை தடுத்திடவும், இம்மாதிரியான தொழிற்சங்களுக்கு ஆதரவாக நலவாரிய அதிகாரிகள் செயல்பட்டு வருவதை இம்மாநாடு வன்மையாக கண்டிக்கிறது.

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் சேலம் கோட்டம் தரும்புரி மண்டலத்தில் பாலக்கோடு கிளையில் ஓட்டுனர்கள்,நடத்துநர்களுக்குதொழிற்சங்கநிர்வாகிகள் என்கிற போர்வையில் தொழிலாளர்களை மிரட்டியும், அடாவடித்தனம் செய்தும் தனக்கு கட்டுப்படாத ஓட்டுநர்கள்,நடத்துநர்களைடூட்டிதராமலும்,ஸ்பெஷலுக்கு போ என்றும், போஸ்டிங் டூட்டி பெற்று தனக்கு கட்டுப்படாத ஓட்டுனர்கள், நடத்துநர்களை பேருந்து மாற்றி மாற்றி தருவதும், தொடர்ந்து இரண்டு மூன்று டூட்டி கொடுத்து தொழிலாளர்களை மன ரீதியாக டார்ச்சர் செய்து மன உளைச்சலுக்கு ஆளாக்கும் போக்கை தடுத்திடவும் தொழிலாளர்களை பல்வேறு இன்னல்களுக்கு ஆளாக்கும் தொழிற்சங்க நிர்வாகிகள் நடவடிக்கையை இம்மாநாடு வண்மையாக கண்டிக்கிறது.

தருமபுரி மாவட்டத்தில் உள்ள மொத்த ஊராட்சிகள் 251, இவ் ஊராட்சிகளில் உள்ளஅனைத்துமக்களுக்கும் புளோரைடு மூலம் ஏற்படும் பாதிப்பிலிருந்து காப்பாற்ற, புளோரைடு இல்லாத சுகாதாரமான குடிநீர் வழுங்க வேண்டும் என்ற நோக்கில் ஒகேனக்கல்கூட்டுகுடிநீர்திட்டம்துவக்கிவைக்கப்பட்டது. ஆனால், தமிழக அரசின் உண்மையான திட்டத்தை நாசம் செய்யும் வகையில் 251 கிராம ஊரட்சிகளிலும் உள்ள தலைவர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி இயக்குநர் (ஊராட்சி) தருமபுரி ஆகியோர் ஆழ்துளைக் கிணறுகள் மூலம் நீர் எடுத்து ஒகேனக்கல் கூட்டு குடிநீருடன் கலந்து செய்வதன் விளைவாக ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டத்தின் உண்மையான நோக்கமான ப்ளோரைடு பாதிப்பிலிருந்து இம் மாவட்ட மக்களை விடுவிக்காத வகையில் ஒகேனக்கல் கூட்டுகுடிநீர் திட்டத்தின் நோக்கத்தை கெடுத்த தர்மபுரி மாவட்டத்தில் உள்ளமொத்தஊராட்சிகள்தருமபுரிமாவட்டநிர்வாகத்தை இம்மாநாடு வன்மையாக கண்டிக்கிறது.

தருமபுரி மாவட்டத்தில் உள்ள நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சியில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் பிரதி நிதிகள் மற்றும் பெண் தலைவர்களுக்கு பதிலாக அவர்களதுகணவர்கள் அல்லது அவர்களின்குடும்பத்தில் உள்ள ஆண்கள் அதிகாரத்தை கையில் எடுத்துக் கொண்டு ஆணவப்போக்குடனும், ரவுடித்தனத்துடனும் அடாவடி செய்துவரும் அவல நிலையை போக்க பெண்களுக்கு உரிய அதிகாரம் வழங்கிட உண்மையில் மக்கள் பிரதிநிதித்துவ சட்டப்படி மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுக்க இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

முன்னதாக மணிப்பூரில் நடந்த பெண்களுக்கு எதிரான கொடுமையை கண்டித்து தீர்மானம் இயற்றப்பட்டது.



# குளித்தலையில் மணல் மாஃபியாக்களை ஒழித்த கரூர் மாவட்ட எஸ்.பி. சுந்தரவதனம் ஐ.பி.எஸ்.

நம்முடைய அரசியல் சூரியன் மாத இதழ் கடந்த மே 2023 இதழில் கரூர் மாவட்டம் குளித்தலை பெரியபாலம் அருகே மணல் மாஃபியாக்கள் தனது உருமாறிய தொழில்நுட்பத்துடன் இருசக்கர வாகனங்களின் வழியாகவே மணல் கடத்துவதாக நாம் குறிப்பிட்டிருந்தோம்.

இந்த செய்தியின் எதிரொலியாக கரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுந்தரவதனம் அவர்களின் உத்தரவின் பேரில் குளித்தலை டிஎஸ்பி ஸ்ரீதர் அவர்களின் தலைமையிலான காவல்துறைகுழுமேற்கண்டஇடங்களில் மணல் கடத்தும் மாஃபியாக்களின் செயல்பாடுகளை தடுத்து நிறுத்தியுள்ளது.

இந்த காவல் துறையின் தீவிர ரோந்து மூலம் மணல் மாஃபியாக்களை கட்டுப்படுத்தியதுடன் இதையொட்டி நடக்கும் பல்வேறு குற்றச்சம்பவங்களை தடுத்து நிறுத்திய பெருமை கரூர் மாவட்ட காவல் துறையையே சாரும்.

இதற்கு பெருமளவில் துணைபுரிந்த மாவட்ட கண்காணிப்பாளர் சுந்தரவதனம் அவர்கள் மிகவும் எளிமையானவர். பொதுமக்கள் யாராயினும் எளிதாக தொடர்பு கொள்ளும் பண்பு வாய்ந்தவர். கடந்த பத்து ஆண்டுகளாக தொடர்ந்து நடந்து வந்த இந்த மணல் கொள்ளையை தனது துரித நடவடிக்கை மூலம் கட்டுப்படுத்தியுள்ளார்.

இவரை தலைமையாகக் கொண்ட கரூர் குளித்தலை டிஎஸ்பி ஸ்ரீதர் அவர்களடங்கிய குழு மிக நேர்த்தியாக செயல்பட்டதன் மூலம் இந்த மணல் மாஃபியாக்களை வெகு சீக்கிரத்தில் பிடிக்க முடிந்தது என்றும், இந்த செய்கையின் மூலம் அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் எந்த ஒரு இடைஞ்சலும் இன்றி நிம்மதி பெருமூச்சு விட காரணமாக இருந்தது என்றும் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் வெகுவாக பாராட்டுகின்றனர். இந்த தீவிர ரோந்து பணி மேலும் தொடருமானால் அப்பகுதி பொதுமக்கள் அச்சமின்றி இருக்க வழிவகுக்கும்.



நமது செய்தி மற்றும் தொடர்ந்து நாம் அளித்த புகாரின் அடிப்படையில் துரிதமாக நடவடிக்கை எடுத்த கரூர் காவல் கண்காணிப்பாளர் சுந்தரவதனம் அவர்களையும், குளித்தலை டிஎஸ்பி ஸ்ரீதர் அவர்களையும், இவர்கள் அடங்கிய அனைத்து காவல்துறை அதிகாரிகள் மற்றும் காவலர்கள் அனைவருக்கும் அரசியல் சூரியன் மாத இதழ் தனது நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரி வித்துக் கொள்வதில் பெருமைப்படுகிறது.



# ஆசிரியர் பணியிடங்கள் மிக விரைவில் நிரப்பப்படும் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அறிவிப்பு

கொரோனா காலத்தில் முடங்கி இருந்த மாணவ மாணவிகளை மேம்படுத்தும் விதமாக "ராக்கெட் சயின்ஸ்" என்ற பெயரில் ஆன்லைன் பயிற்சி திட்டம், 2022ம் ஆண்டு ஜனவரி 26ந் தேதி தொடங்கப்பட்டது. இதில் அரசு பள்ளி மாணவ மாணவிகள் கலந்துகொண்டனர். இவர்களுக்கு மூத்த விஞ்ஞானி சிவதாணு பிள்ளை பயிற்சி அளித்தார்.

தற்போது அதில் பங்கேற்ற அரசு பள்ளி மாணவர்களில் சிலர் ரஷியாவில் உள்ள "யூரி ககாரின்" விண்வெளி ஆய்வு மையத்தை பார்வையிட இருக்கின்றனர். ரஷிய விண்வெளி ஏவுதளத்தை பார்வை யிடுவதற்காகதேர்வுசெய்யப்பட்டுஇருக்கும் 50 மாணவமாணவிகளுக்கு பாராட்டு தெரிவிக்கும் நிகழ்ச்சி, சென்னை கஸ்தூரி ரங்கன் சாலையில் உள்ள ரஷிய கலாசார மைய வளாகத்தில் நடந்தது.



இதில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கலந்துகொண்டார். நிகழ்ச்சி முடிந்ததும் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி நிருபர்களிடம் கூறியதாவது:

இந்தியாவுக்கு ரஷியா அதிக உதவிகள் செய்துள்ளது. அங்கு நம் பள்ளி மாணவர்கள் செல்வது மகிழ்ச்சியாக உள்ளது. எந்திர கற்றல், செயற்கை நுண்ணறிவு, ரோபோட்டிக்ஸ் உள்ளிட்டவைகளை கற்றுக்கொள்ள மைக்ரோசாப்ட் நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. விஞ்ஞானி சிவதானு பிள்ளை போல் பலர் பள்ளி மாணவர்களுக்கு உதவும் வகையில் செயல்பட்டுவரும் நிலையில் அரசு சார்பிலும் அவர்களுக்குதேவையானவற்றைசெய்யமுதலமைச்சர் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும். ஆசிரியர் சங்கங்களுடன் தனித்தனியாக பேசி இருக்கிறோம். அவர்களின் 10 கோரிக்கைகள் தொடர்பாக நிதி அமைச்சருடன் பேச இருந்தோம். ஆனால் முதலமைச்சருடன் அவர் சந்திக்க வேண்டியிருந்ததால், எங்களுடைய சந்திப்பு தள்ளிப்போனது. திருச்சியில் நடந்த நிகழ்ச்சியில் சந்தித்தபோதுகூட நிதி அமைச்சரிடம் அது பற்றி பேசியிருக்கிறேன்.

அவர் சென்னை வந்த பிறகு, நானும், எங்கள் துறை முதன்மைச்செயலாளரும் இணைந்து பேசி முதலில் எந்த கோரிக்கைகளுக்கு தீர்வு காண்பது என்பது பற்றி ஆலோசித்து, முதலமைச்சரின் கவனத்துக்கு கொண்டு செல்வோம். ஆசிரியர் பணியிடங்கள் குறித்து ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் அறிவிப்புகள் வர உள்ளது. மிக விரைவில் அனைத்து ஆசிரியர் பணியிடங்களும் நிரப்பப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

இதையடுத்து அவரிடம், 'தமிழ்நாட்டின் கல்வித்துறை சி.ஆர்.எஸ். நிதியையும், மத்திய அரசு கொடுக்கும் நிதியையும் சரியாக பயன்படுத்துவதில்லை என்று கவர்னர் கூறியிருக்கிறாரே?' என்று நிருபர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு அமைச்சர், 'மத்திய அரசு வழங்கக்கூடிய நிதியை அதிகளவில் நல்ல விஷயத்தில் பயன்படுத்தக்கூடிய துறை பள்ளிக்கல்வித்துறைதான். கவர்னர் எதில் சரியாக நிதியை பயன்படுத்தவில்லை என்று குறிப்பிட்டு சொன்னால், அதற்கு விளக்கம் அளிக்க தயாராக இருக்கிறோம். அதேபோல், சி.ஆர். எஸ். செயல்பாட்டை பொறுத்தவரையில், நல்ல விஷயத்துக்காக ஆரம்பிக்கப்பட்ட திட்டம் அது. நல்ல விதத்தில் அது பயன்படும்' என்றார்.



# தமிழகத்தில் இருந்து குடும்ப ஆட்சியை ஒழிக்கவே அண்ணாமலை நடைபயணம்: அமித்ஷா பேச்சு

மத்திய பாஜக அரசின் கடந்த 9 ஆண்டு கால சாதனைகளை தமிழக மக்களிடம் எடுத்துக்கூறும் வகையில், பாஜக தலைவர் அண்ணாமலை இன்று முதல் நடைபயணம் மேற்கொள்கிறார்.

'என் மண், என் மக்கள்' என்ற தலைப்பில் மேற்கொள்ளப்படும் இந்த நடைபயண தொடக்க விழா ராமேசுவரம் பேருந்து நிலையம் அருகே நடைபெற்றது. விழாவில் மத்திய மந்திரி அமித் ஷா பேசியதாவது: இந்த நிகழ்ச்சியில் தமிழில் பேச முடியாததற்கு வருந்துகிறேன்.

ராமநாத சுவாமி அருளாசியால் நம்முடைய பாஜக மாநில தலைவர் அண்ணாமலை தமிழ்நாடு முழுவதும் நடைபயணம் செல்லவிருக்கிறார். என் மண் என் மக்கள் என்ற இந்த நடைபயணமானது வெறும் அரசியல் சார்ந்த நடைபயணம் மட்டும் அல்ல.

இந்த நடைபயணம் இந்த பழமையான தமிழ் மொழியை உலகம் முழுவதும் கொண்டு சேர்க்கும் நடைபயணம். தமிழகத்தின் இந்த கலாச்சாரத்தை பண்பாட்டை காஷ்மீரில் இருந்து கன்னியாகுமரி வரை, கல்கத்தாவில் இருந்து சோம்நாத் வரை கொண்டு செல்லும் ஒரு நடைபயணமாகும்.

இந்திய நாட்டின் 130 கோடி மக்களின் மனதிலே மரியாதையை ஏற்படுத்தும் நடைபயணம். தமிழகத்தில் இருந்து குடும்ப ஆட்சியை ஒழிப்பதற்காக செய்யப்படும் நடைபயணம்.

தமிழ்நாட்டை ஊழல் இருந்து விடுவிப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடைபயணம். இந்த பயணம் தமிழ்நாட்டில் இருக்கும் சட்டம் ஒழுங்கை சீர்படுத்துவதற்காக செய்யப்படும் நடைபயணம். ஊழல்வாதிகளை ஒழித்து ஏழை மக்களின் நலத்தினை பேணுகின்ற ஒரு அரசை உருவாக்குவதற்காக நடத்தப்படும் யாத்திரை. 700 கிமீ 234 தொகுதிகளிலும் நமதுமாநிலதலைவர்அண்ணாமலைநடக்கவிருக்கிறார். தமிழ்நாட்டில் இருக்கிற ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒவ்வொரு தொகுதியிலும் நமது பிரதமரின் செய்திகளை கொண்டு செல்லவிருக்கிறார்.

புரட்சிதலைவர் எம்ஜிஆர், புரட்சிதலைவி ஜெயலலிதா ஆகியோர் கொண்டு வந்த ஏழைகளின் நலத்திட்டங்களை மீண்டும் கொண்டு வருவதற்காக இந்த நடைபயணத்தை நடத்துகிறார். பாஜகவின் மாநிலதலைவர் அண்ணாமலைதனதுநடைபயணத்தின் மூலமாக பாரம்பரியம் மிக்க தமிழ் மொழி, தமிழ் கலாச்சாரத்தை மேலும் பலப்படுத்த பிரதமரின் செய்தியைதமிழகத்தில் உள்ள அனைத்துமக்களிடமும் கொண்டு சேர்க்கவிருக்கிறார்.

பிரதமர் மோடி தமிழ் மொழியின் பழமையை, சிறப்பினை உலகின் பல்வேறு மேடைகளில் முழங்கி யிருக்கிறார். ஐநா சபையில் உலகின் பழமையான தமிழ்மொழி பற்றி பேசியது நம்முடைய பிரதமர் மோடி. இப்போது ஜி20 கூட்டங்கள் எல்லாம் நாட்டிலே நடந்துகொண்டிருக் கின்றன. அதன் முத்திரை வாசகமான யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற வாசகத்தை ஐநா சபையில் பிரதமர் மோடி முழங்கினார். இவ்வாறு அவர் பேசினார்.



# பாஜகவிலும் வாரிசு அரசியல்!

இந்தியாவின் உள்துறை அமைச்சர் அமித்ஷா கடந்த 21ஆம் தேதி மெட்ரோ ரயில் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டுவதற்கு தமிழகம் வந்தார்.

அப்போது பேசிய அமித்ஷா "தமிழகத்திலும், நாட்டின் பிற பகுதிகளிலும் சில கட்சிகள் குடும்ப அரசியலை நடத்தி வருகின்றன. பிற மாநிலங்களைச் சேர்ந்த மக்கள், அங்குள்ள கட்சிகள் நடத்தும் குடும்ப, வாரிசு அரசியலுக்கு எதிராக சரியான பாடத்தைப் புகட்டியுள்ளனர். தமிழகத்திலும் அதுபோன்ற பாடம் புகட்டப்படும். பாஜக மக்களின் துணை கொண்டு வாரிசு அரசியலுக்கு முடிவு கட்டப்படும்" என்று கூறினார்.


வாரிசு அரசியலுக்கு எதிராக பேசியுள்ள பாஜக அமைச்சர் அமித்ஷா அவர்களின் கருத்து வெறும் அரசியலுக்கு மட்டும் தானா? அவர்களுடைய கட்சியைச் சார்ந்தவர்கள் வாரிசு அரசியலில் எவ்வாறு கோலாச்சுகிறார்கள் என்பது பற்றி ஒரு அலசல்.

இங்கு உதாரணத்திற்காக மட்டுமே பாரதிய ஜனதா கட்சியின் சில அமைச்சர்கள், தலைவர்கள் மற்றும் அவர்களின் வாரிசுகள் கட்சி பதவி குறித்து குறிப்பிட்டு உள்ளோம்.

நேரு குடும்பத்தில் இருந்து குடும்ப, வாரிசு அரசியலை நிறுத்த வேண்டும் எனத் தொடர்ந்து பேசும் பாஜக, நேரு குடும்பத்தில் இருந்து வந்த மேனகா காந்தி மற்றும் அவரின் மகன் வருண் காந்திக்கும் பதவி வழங்கி இருக்கிறார்கள்.

வாரிசு அரசியல் என்பது பாரதிய ஜனதா கட்சியில்









மட்டும் இல்ல, காங்கிரஸ் போன்ற பெரும்பாலான தேசிய மற்றும் திமுக, அதிமுக, பாமக, தேமுதிக போன்ற மாநில கட்சியில் இன்றியமையாத ஒன்றாக வேரூன்றி திகழ்கிறது.

பாஜக தன்னை வாரிசு அரசியல் இல்லாத கட்சி என்று முன்னிலைப்படுத்தி கொண்டாலும் அது உண்மை அல்ல என்பதற்கு நிகழ்கால அரசியலிலே பல




ஆதாரங்கள் உள்ளன.

திமுகவில் குடும்ப அரசியல் இருப்பதை சுட்டிக்காட்டி குடும்ப அரசியல் வேறு, வாரிசு அரசியல் வேறு என விளக்கம் அளித்து வருகிறார்கள். எந்த கட்சியை சேர்ந்தவர்களாக இருந்தாலும் அரசியல்வாதிகளின் பிள்ளைகள், குடும்பத்தினர் அரசியலில் களமிறக்கப்படுகின்றனர் என்பதே நிதர்சமான உண்மை.

வசுந்தரா ராஜே சிந்தியா

ராஜஸ்தான் மாநிலத்தின் முன்னாள் முதல்வர் வசுந்தரா ராஜே சிந்தியாவின் மகன் துஷ்யந்த் சிங் எம்.பி ஆக உள்ளார். வசுந்தரா ராஜே சிந்தியாவின் தாய் விஜய ராஜே சிந்தியா ஜன சங்கத்தை சேர்ந்தவர், பாஜகவை உருவாக்கிய உறுப்பினர்களில் ஒருவர்.

யஸ்வந்த் சின்ஹா:

பாஜக ஆட்சியில் வெளியுறவுத்துறை மற்றும் நிதியமைச்சராக இருந்த யஷ்வந்த் சின்ஹாவின் மகன் ஜெயந்த் சின்ஹா எம்.பி ஆக உள்ளார். இவர் பாஜக அமைச்சரவையில்இணை அமைச்சராகவும்இருந்தவர். இவரின் தந்தை யஷ்வந்த் சின்ஹா பாஜகவில் இருந்து விலகி திரிணாமுல் காங்கிரஸ் கட்சியில் இணைந்தது குறிப்பிடத்தக்கது.

பிரமோத் மகாஜன்:

வாஜ்பாய் ஆட்சிக் காலத்தில் அமைச்சராக இருந்த பிரமோத் மகாஜன் மகள் பூனம் மகாஜன் எம்பியாக உள்ளார்.

அனுராக் தாக்கூர்:



இமாச்சலப் பிரதேசத்தின் முதல்வராக இருந்த பிரேம் குமார் துமால் மகன் அனுராக் தாக்கூர் விளையாட்டுத் துறை அமைச்சராக இருக்கிறார்.

கோயல்:

டெல்லி சட்டமன்றத்தின் சபாநாயகராக இருந்த சார்த்தி லால் கோயல் மகன் விஜய் கோயல் 20172019 வரையில் மத்தியில் பாஜக அமைச்சரவையில் அங்கம் வகித்தார்.

விஜயகுமார் மல்கோத்ரா:

5 முறை எம்.பி மற்றும் 2 முறை எம்.எல்.ஏவாக இருந்த விஜய் குமார் மல்கோத்ராவின் மகன் அஜய் குமார் மல்கோத்ரா 2013ல் நாடாளுமன்ற தேர்தலில் போட்டி யிட்டார்.

விஜயவர்ஜியா:

இந்தூரின் முன்னாள் மேயர் கைலாஷ் விஜயவர்ஜியாவின் மகன் ஆகாஷ் எம்.எல்.ஏவாக உள்ளார்.



பாரதிய ஜனதா கட்சி மற்ற கட்சிகளில் உள்ள வாரிசு அரசியலை ஒழித்துக் கட்டுவது இருக்கட்டும் தன்னுடைய கட்சியில் உள்ள வாரிசு அரசியலை முதலில் சுத்தப்படுத்துவார்களா?

# அமித்ஷாவின் பேச்சிற்கு முதல்வர், அமைச்சர் பதிலடி



பா.ஜனதா மாநில தலைவர் அண்ணாமலையின் நடைபயணத்தை தொடங்கி வைத்து பேசிய மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா கூறுகையில்,

சோனியாவுக்கு ராகுலை பிரதமர் ஆக்க வேண்டும். மு.க.ஸ்டாலினுக்கு உதயநிதியை முதலமைச்சர் ஆக்க வேண்டும். லாலு பிரசாத்துக்கு தேஜஸ்வியையும், மம்தா பானர்ஜிக்கு அவருடைய மருமகனையும், மகாராஷ்டிரத்தில் உத்தவ் தாக்கரேவுக்கு அவருடைய மகனையும் முதலமைச்சர் ஆக்க வேண்டும் என்பதே கொள்கை என்று கூறினார்.

இந்நிலையில் தி.மு.க. இளைஞர் அணி மாநில, மாவட்ட, மாநகர அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அறிமுக கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

தி.மு.க.வை குடும்ப ஆட்சி என்கிறார் அமித்ஷா. பா.ஜனதாவில் எத்தனை பேர் வாரிசுகள்? நான் பட்டியல் போடட்டுமா? அமித்ஷாவுக்கு இப்போது திடீரென்று மீனவர்கள் மீது திடீர் பாசம் எப்படி வந்தது? மோடி ஆட்சிக்கு வந்த பிறகு மீனவர்கள் மீது எத்தனை தாக்குதல்கள்? செந்தில்பாலாஜி பற்றி கேள்வி கேட்கிறீர்கள்.

குற்ற வழக்குகளில் சம்பந்தப்பட்ட பலர் மந்திரிகளாக இருக்கிறார்களே இதுபற்றி மோடியிடமும் அமித்ஷாவிடமும் கேட்க முடியுமா? என்னால் செந்தில்பாலாஜி வழக்கு பற்றி பேச முடியும். ஆனால் கோர்ட்டில் வழக்கு இருக்கிறது. அமலாக்கத்துறையை வைத்து எதிர்க்கட்சிகளை மிரட்டி வருகிறார்கள். உங்கள் ஆட்டமெல்லாம் விரைவில் முடிய போகிறது. இந்தியாவை காப்பாற்ற இந்திய அணிக்கு வாக்களியுங்கள் என்று கேட்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

அதேபோல்இளைஞர் அணி மாநில செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசும்போது உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது: ராமேசுவரத்துக்கு வந்த அமித்ஷா என்னைப் பற்றி பேசி இருக்கிறார். என்னை முதலமைச்சர் ஆக்குவதுதான் முதலமைச்சர் லட்சியமாம். நான் மக்களை சந்தித்து தேர்தலில் வெற்றி பெற்று இன்று இந்த பதவிக்கு வந்திருக்கிறேன். நான் அமித்ஷாவை கேட்கிறேன். உங்கள் மகன் ஜெய்ஷா கிரிக்கெட் சங்க தலைவர் ஆகியிருக்கிறாரே, அவர் எத்தனை கிரிக்கெட் போட்டிகளில் விளையாடினார்? எத்தனைரன்கள் அடித்தார்?நான்ஏதாவதுகேட்டேனா? ஜெய்ஷா நடத்தி வரும் நிறுவனத்தின் சொத்து மதிப்பு 2014ல் வெறும் ரூ.74 லட்சம் தான். இப்போது அந்த நிறுவனத்தின் சொத்து மதிப்பு ரூ.130 கோடி. இது எப்படி வந்தது? இந்த திடீர் வளர்ச்சி எப்படி வந்தது? இவ்வாறு உதயநிதி ஸ்டாலின் பேசினார்.





# டாப்3 பொருளாதாரங்களில் ஒன்றாக எனது 3வது ஆட்சிக்காலத்தில் இந்தியா

## பிரதமர் நரேந்திர மோடி பேச்சு

டெல்லி பிரகதி மைதானத்தில் வரும் செப்டம்பர் மாதம் ஜி20 உச்சிமாநாடு நடைபெற உள்ளது. இதையொட்டி பிரகதி மைதானத்தில் புதுப்பிக்கப்பட்ட சர்வதேச கண்காட்சி மற்றும் மாநாட்டு மையத்தை பிரதமர் மோடி திறந்து வைத்தார். இந்த மையத்திற்கு பாரத மண்டபம் என பெயரிடப்பட்டுள்ளது.

திறப்பு விழாவில் பிரதமர் மோடி பேசியதாவது:

இந்தியாவின் உள்கட்டமைப்பு மாறுகிறது. உலகின் மிக உயரமான ரெயில்வே பாலம், மிக உயரத்தில் உள்ள மிக நீளமான சுரங்கப்பாதை இந்தியாவில் உள்ளது, மிகவும் உயர்ந்த போக்குவரத்து சாலை, மிகப்பெரிய அரங்கம், மிகப்பெரிய சிலை. இவை அனைத்தும் இந்தியாவில் உள்ளது. அதனுடன் பொருளாதார வளர்ச்சியும் வேகமாக இருக்கும். எங்களது முதல் ஆட்சிக் காலத்தில், பொருளாதாரத்தில் இந்தியா 10வது இடத்தில் இருந்தது. இரண்டாவது பதவிக்காலத்தில் உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதாரமாக இந்தியா உள்ளது. இந்த சாதனைகளை அடிப்படையாக வைத்து பார்த்தால், மூன்றாவது ஆட்சிக்காலத்தில் பொருளாதாரம் உலகின் முதல் மூன்று இடங்களுக்குள் இருக்கும். எனது மூன்றாவது பதவிக்காலத்தில், இந்தியா முதல் மூன்று பொருளாதாரங்களில் ஒன்றாக இருக்கும். இது மோடியின் உத்தரவாதம். எங்கள் அரசாங்கம் கடந்த 9 ஆண்டுகளில் 40 ஆயிரம் கி.மீ. ரெயில் பாதைகளை மின்மயமாக்கி உள்ளது. ஆனால் முந்தைய அரசாங்கங்கள் கடந்த 60 ஆண்டுகளில், 20,000 கிமீ ரெயில் பாதைகளை மட்டுமே மின்மயமாக்க முடிந்தது. இப்போது ஒவ்வொரு மாதமும் 6 கி.மீ. அளவுக்கு மெட்ரோ பாதையை முடிக்கிறோம், 4 லட்சம் கி.மீ. கிராம சாலைப் பணிகளை முடிக்கிறோம். விமான நிலையங்களின் எண்ணிக்கை 150ஐ எட்டியிருக்கிறது.

இவ்வாறுபிரதமர்மோடிபேசினார்.பிரகதிமைதானத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட இந்த வளாகமானது, மாநாட்டு மையம், கண்காட்சி அரங்குகள், திறந்தவெளி அரங்கம் போன்ற பல அதிநவீன வசதிகளைக் கொண்டுள்ளது.

சர்வதேச கண்காட்சி மற்றும் மாநாட்டு மையம், இப்போது பாரத மண்டபம் என மறுபெயரிடப்பட்டுள்ளது. அத்துடன், இதன் திறப்பு விழாவில் கடந்த 10 ஆண்டுகளின் வளர்ச்சியை, சுதந்திரத்திற்குப்பிந்தைய 60 ஆண்டுகளின் ஒட்டுமொத்த வளர்ச்சியுடன் ஒப்பிட்டு பிரதமர் பேசியிருக்கிறார். இதன்மூலம், வரும் பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக அரசியல் களத்தின் தளமாக இந்த பாரத மண்டபம் மாறி யிருக்கிறது.




# மின்கம்பி அறுந்து விழுந்ததால் வந்தே பாரத் ரெயில் நடுவழியில் நிறுத்தம்

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டையை அடுத்த ஆம்பூர் ரெயில் நிலை யத்தில் நேற்று மாலை 4.45 மணிக்கு சென்னை நோக்கி செல்லும் மார்க்கத்தில் 2வது பிளாட்பாரத்தில் மின்சார ரெயில் என்ஜினுக்கு செல்லும் உயர் அழுத்த மின் கம்பி அறுந்து தண்டவாளத்தில் விழுந்தது.

இதனால் மின் தடை ஏற்பட்டது. இதன் காரணமாக மைசூ ரில் இருந்துசென்னை நோக்கி சென்ற வந்தே பாரத் ரெயில் விண்ணமங்கலம் ரெயில் நிலையத்தில் மாலை 4.54 மணியளவில் நிறுத்தப்பட்டது.

இது குறித்து தகவல் அறிந்ததும் ஆம்பூர் மற்றும் வாணியம்பாடி, ஜோலார் பேட்டை ரெயில்வே ஊழியர் கள் மின் கம்பியை சரிசெய் யும் பணியில் ஈடுபட்டனர். சுமார் 1 மணி நேரம் போராடி அறுந்து விழுந்த உயர் அழுத்த மின் கம்பியை அகற்றிவிட்டு புதியதாக மின் கம்பியை மாற்றினர். இதனால் சுமார் 1 மணி நேரம் மின் தடை ஏற்பட்டது. சரிசெய்யப்பட்ட பின்னர் நடுவழியில் நின்ற வந்தே பாரத் ரெயில் மாலை 5.27 மணியளவில் அரை மணி நேரம் தாமதமாக மேலும் ஆம்பூர் அருகே பெங்களூரு ரெயில் நிலையத்தில் இருந்து சென்னை செல்லும் டபுள் டெக்கர் ரெயில் சில நிமிடம்நின்று தாமதமாக சென்னை நோக்கிபுறப்பட்டது. ரெயில்கள் நடுவழியில் நின்றதால் ரெயில் பயணிகள் அவதிப் பட்டனர்.

# அரசு பஸ் கண்ணாடி உடைப்பு

நெய்வேலி என்.எல்.சி. நிர்வாகத்தை கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பா.ம.க தலைவர் அன்புமணி கைது செய்யப்பட்டார்.

இதை கண்டித்து மாநிலம் முழுவதும் பா.ம.க வினர் சாலை மறியல் மற்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதன்படி, வாலாஜா அடுத்த மருதாலம் கூட்ரோடு அருகே பா.ம.க வினர் சாலை மறியலில் ஈடுபட்டனர். அப்போது, அவ்வழியாக திருத்தணியில் இருந்து குடியாத்தம் நோக்கி சென்று கொண்டிருந்த அரசு பஸ் மீது மர்மநபர்கள் கல்வீசி தாக்குதல் நடத்தினர்.

இதில் பஸ்சின் முன் பக்க கண்ணாடி உடைந்து சேதமடைந்தது. ஆனால், அதிர்ஷ்டவசமாக பஸ்சில் இருந்த பயணிகள் யாருக்கும் எந்த காயமும் ஏற்படவில்லை.

இதுகுறித்து தகவலறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டனர்.

மேலும், கல் வீசி தாக்குதல் நடத்திய மர்ம கும்பல் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

அரசு பஸ் மீது கல்வீசிய சம்பவத்தால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.



# தக்காளி விலையேற்றம்! மக்கள் ஏமாற்றம்!!

தக்காளி விளையாட்டு தக்காளி வருடத்தில் மூன்று அல்லது நான்கு மாதங்கள் விலை போகாமல் ரோட்டில் கேட்பாரற்று கொட்டி கிடக்கும் காலங்கள் உண்டு.

ஆனால் இன்று விலை மதிப்பு வாய்ந்த ஒரு பொருளாக பார்க்கப்படுகிறது.

இதனால் சாமானியர்கள் கடும் துன்பத்திற்கு ஆளாகி நிற்கின்றனர். இதற்கெல்லாம் யார் அல்லது எது காரணம்? தக்காளி ஏன் திடீரென விலை உயர்ந்து விட்டது?

சாதாரணமாக 10 லிருந்து 20 ரூபாய் வரை விற்கும் தக்காளி திடீரென நூறிலிருந்து 150 வரை விற்க ஆரம்பித்து விட்டது. தக்காளி விலை விண்ணைத் தொடும் அளவு உயர்ந்து விட்டது. ஆனால், சாமானிய குடிமகன் விண்ணை தொட்டுக் கொண்டிருக்கும். தக்காளியின் விலையை கொடுக்க முடியாமல் தடுமாறி ஓய்ந்து போகிறான் என்பது தற்போதைய நிலையாக உள்ளது.

நமது பண்டைய இந்தியர்களின் பாரம்பரிய உணவு முறைகள்:

கி.மு. 9000க்குப் பிறகு, சிந்து சமவெளி நாகரிகங்களுக்கும் ஏனைய பிற நாகரிகங்களுக்கும் இடையே ஏற்பட்ட மறைமுகத் தொடர்புகளின் முதல் காலம் புதிய கற்காலப் புரட்சி மற்றும் விவசாயத்தின் பரவல் ஆகியவற்றின் விளைவாக நிகழ்ந்ததாகத் தெரிகிறது. கி.மு. 7000 இல், விவசாயம் வளமான பிறை முதல் சிந்து சமவெளி வரை பரவியது, மேலும், கோதுமை மற்றும் பார்லி பயிரிடப்படத் தொடங்கியது. உள்ளூர் விவசாய சமூகங்களில் எள், மற்றும் கூம்பிய கால்நடைகள் வளர்க்கப்பட்டன.

இந்தியாவில் ஆரம்பகால உணவு முக்கியமாக பருப்பு வகைகள், காய்கறிகள், பழங்கள், தானியங்கள், பால் பொருட்கள் மற்றும் தேன் ஆகியவற்றைக் கொண்டிருந்தது. இன்று உண்ணப்படும் முக்கிய உணவுகளில் பலவிதமான பருப்பு வகைகள், முழு கோதுமை மாவு, அரிசி மற்றும் முத்து திணை ஆகியவை அடங்கும், இது கிமு 6200 முதல் இந்திய துணைக் கண்டத்தில் பயிரிடப்பட்டு வருகிறது.

இந்த தக்காளியின் கதைதான் என்ன?

படையெடுப்புகள், வர்த்தக உறவுகள் மற்றும் காலனித்துவம் போன்ற வரலாற்று நிகழ்வுகள் இந்த நாட்டிற்கு சில உணவுகளை அறிமுகப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

புதிய உலகத்தின் கொலம்பிய கண்டுபிடிப்பு, போர்ச்சுகீசிய தொடர்புகள் இந்தியாவிற்கு பல புதிய காய்கறிகளையும் பழங்களையும் கொண்டு வந்தது. உருளைக்கிழங்கு, தக்காளி, மிளகாய், வேர்க்கடலை மற்றும் கொய்யா போன்றவைகள் இதில் அடங்கும். இதில் பெரும்பாலானவை இந்தியாவின் பல பகுதிகளில்

பிரதானமாக மாறியுள்ளன. இதில் ஒன்றான தக்காளி தான் இன்று ஒட்டுமொத்த இந்தியாவையே கலங்க வைக்கும் ஒரு உணவுப் பொருளாக மாறி இருக்கிறது.

நூற்றாண்டுகணக்கில்அந்நியர்களால்பாதிக்கப்பட்டு போன இந்த இந்தியா அந்நியர்களால் இங்கு கொண்டு வந்து விடப்பட்ட உணவுப் பொருள்களினாலும் இன்றும் பாதிப்பை ஏற்படுத்த முடிகிறது எனில் அதற்கு யார் காரணம்?

சரிஇந்தவிலையேற்றங்களையார்கட்டுப்படுத்துவது? விவசாய பொருளில் ஒன்றான தக்காளி விலை ஏற்றம் அதை பயிரிடும் விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை கொடுத்தாலும் பெரும்பாலான மக்களுக்கு அது ஒரு துயரமான தொடர் கதையாகவே இருந்து கொண்டிருக்கிறது.



பொதுவாக விவசாய விலைப் பொருள்களுக்குநிர்ணயிக்கப்படும் விலை என்பது மார்க்கெட்டில் அந்தப் பொருள்களின் வரத்தைப் பொறுத்து அமைகிறது என்றாலும் இதற்கென ஒரு கமிட்டி உருவாக்கி விவசாயப்பொருள்களின்விலையை ஒரே சீரான அளவில் இருக்கும்படி செய்வதற்குஏதேனும்ஒழுங்குமுறை ஆணையத்தையோ அல்லது அதற்கென ஒரு தகுதிகாண் அமைப்பையோ அரசுகள் உருவாக்க வேண்டும் என்பது ஒரு சாராரின் கருத்தாக உள்ளது.

“ஒரு காலத்தில் தெலுங்கு மாநிலங்களிலோ, உ.பி. யிலோ தக்காளி சாப்பிடுவது கிடையாது. ஆனால், பஞ் சாபி தாபாக்களின் தாக்கத்தால், தக்காளி கிரேவிகள் கிட்டத்தட்ட எல்லா பகுதிகளிலும் காணப்படுகின்றன. ஆங்கிலேயர்களின் தாக்கத்தால், தக்காளி முதல் தக்காளி சாஸ் வரை எங்கும் காணப்படுகின்றன. மோமோஸ்,பக்கோடிகள்மற்றும்பர்கர்கள்அனைத்திலும் தக்காளி சாஸ் உள்ளது. இப்போது தெற்கில் தோசையுடன் சிவப்பு சட்னியை வழங்குகிறார்கள். தக்காளி தோசை செய்கிறார்கள்” எனவே நிகழ் காலங்களில் தக்காளியின் தேவையும் உபயோகமும் வழக்கத்துக்கு மாறாக அதிகப்படுத்தப்பட்டதும் இந்த விளையாட்டுக்கு ஒரு காரணமாக அமைந்துள்ளது என சிலர் கருதுகிறார்கள்.

தற்போது, உலகளவில் தக்காளி உற்பத்தியில் இந்தியா 2வது இடத்தில் உள்ளது. 2022ல் 20 மில்லியன் டன்னுக்கும் மேலாக தக்காளி பயிரிடப்பட்டதாக தேசிய தோட்டக்கலை வாரியம் மதிப்பிட்டிருக்கிறது.

மாநிலங்களைப்பொறுத்தவரை,மத்தியப்பிரதேசத்தில் 14.63 சதவீதமும், ஆந்திராவில் 10.92 சதவீதமும், கர்நாடகாவில் 10.23 சதவீதமும் தக்காளி பயிரிடப்படுகிறது.

தக்காளியின் விலை திடீரென அதிகரித்தது தொடர்பாக மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் ரோகித் குமார் சிங் அவர்கள் கூறுகையில் "சில பகுதிகளில் திடீர் மழை பெய்து வருவதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. சில இடங்களில் மழையால் பயிர்கள் சேதமடைந்துள்ளன. மழைக்காலம் துவங்கியுள்ளதால் தற்போது கடல் அலைகள் அதிகமாக உள்ளன. இவை தேவை வரத்து இடைவெளியால் ஏற்படும் பிரச்னைகள். விலை உயர்வு தற்காலிகமானது," என்றார்.

கர்நாடகாவில் பெய்து வரும் கனமழையால் தக்காளி பயிர்கள் சேதம் அடைந்து வரத்து தட்டுப்பாடு ஏற்பட்டு நாடு முழுவதும் விலை உயர்ந்துள்ளது.

நாடு முழுவதும் பெய்து வரும் தொடர் மழை காரணமாகதக்காளிவிலையில்பாதிப்புஏற்பட்டுள்ளது. கனமழை மற்றும் கடும் வெப்பத்தால் ஏற்பட்ட பயிர் சேதம் குறைந்த வரத்து காரணமாக தக்காளி விலை கிலோவுக்கு ரூ.10, 20ல் இருந்து ரூ.80, 100 ஆக உயர்ந்துள்ளது .

மும்பையைச் சேர்ந்த கமாடிட்டி மார்க்கெட் நிபுணரும், கெடியா அட்வைசரியின் தலைவருமான அஜய் கேடியா, “இந்த ஆண்டு, பல்வேறு காரணங்களுக்காக, முந்தைய ஆண்டுகளை விட குறைவான தக்காளி விதைக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு பீன்ஸ் விலை உயர்ந்ததால், இந்த ஆண்டு பல விவசாயிகள் அவரை சாகுபடிக்கு மாறினர். ஆனால், பருவமழை பெய்யாததால், பயிர்கள் கருகி வருகின்றன. அதிக மழை மற்றும் கடுமையான



வெப்பத்தால் ஏற்படும் பயிர் சேதம் காரணமாக காய்கறிகள், குறிப்பாக தக்காளி வரத்து குறைவாக உள்ளது."

பொதுவாக காய்கறிகளின் விலை ஏதாவது ஒரு பகுதியில் பாதிப்பு ஏற்படுத்தும் அளவுக்கு உயரும் பிறகு சில நாட்களில் அது சரியாகிவிடும். ஆனால், இந்த முறை ஏற்பட்டிருக்கிற தக்காளியின் விலை உயர்வு ஏற்ற இறக்கங்களில்லாமல் இந்தியா முழுமைக்கும் வஞ் சனை இன்றி விலை உயர்ந்திருப்பதால், பொதுவாகவே மாநிலம் மற்றும் மத்திய அரசுகளின் ஒழுங்குமுறை ஆணையங்கள்தோட்டக்கலைத்துறைநடவடிக்கைகள் தோல்வியை கண்டிருக்கின்றன என்றும் ஒரு சாராரின் கருத்தாக உள்ளது.

உயர்ந்து வரும் மக்கள் தொகைக்கு ஏற்பவும், ஒரு பொருளின் மக்களிடையே உள்ள பயன்பாடுகளின் மதிப்பீட்டின்படியும், அம்மதிப்பீட்டினை முழுமையாக்கும் வகையில் உற்பத்தியானது அமைந்துள்ளதா என்பதை தோட்டக்கலைத் துறை கண்காணிக்கவில்லை என்பதையே இந்த தக்காளி விலையேற்றம் காட்டுகிறது என்பது பெரும்பாலானோரின் கருத்து ஆகும்.

சில சமயங்களில் இந்த தக்காளி வெங்காயம் போன்ற அத்தியாவசிய காய்கறிகளின் விலை ஏற்ற இறக்கங்கள் ஒரு பிராந்தியத்தின் அல்லது நாட்டின் தேர்தல் முடிவுகளையே மாற்றி விட கூடும் அளவுக்கு அமைந்திருக்கிறது என்பது கண்கூடாகும்.

விவசாயிகளிடையே இயல்பாகத் தொற்றிக் கொண்டிருக்கும் ஒரு வழக்கம் எந்த பொருளின் விலை ஏறுகிறதோ அந்த பொருளின் உற்பத்தியினை உட னடியாக உயர்த்தி விடுவது என்பது இயல்பானதாகும். அதனைப் போன்று தக்காளி விலை ஏற்ற விஷயத்திலும் உடனடியாக ஏதேனும் மாற்றம் நிகழ்வு அல்லது அரசுகள் இம்மாற்றத்திற்கான முன்னெடுப்புகளை தீவிரப்படுத்துமா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

# தொடர் மழையால் பொள்ளாச்சி பகுதியில் தென்னை நார் உற்பத்தி பாதிப்பு

பொள்ளாச்சி, கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சி, கிணத்துக்கடவு, நெகமம், ஆனைமலை உள்ளிட்ட பகுதிகளில் 2000க்கும் மேற்பட்ட தென்னை நார் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. இங்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் 1.5 லட்சம் பேர் வேலை பார்த்து வருகின்றனர். கோவை மாவட்ட தென்னை நார் தொழிற்சாலைகளில் கொப்பரை, தென்னை நார், காகித அட்டை ஆகியவை உற்பத்தி செய்யப்படுகிறது. அதன்பிறகுஅவற்றைவிவசாயிகள்வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றனர். இதன்மூலம் அவர்களுக்கு கோடிக்கணக்கில் வருமானம் கிடைத்து வருகிறது. இந்த நிலையில் பொள்ளாச்சி உள்ளிட்ட பகுதிகளில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் அங்கு உள்ள உலர் களங்களில் தண்ணீர் தேங்கி நிற்கிறது.

எனவே தென்னை நார்களை வெயிலில் உலர வைக்க முடியவில்லை. இதனால் அங்கு நார் உற்பத்தி வெகுவாக பாதிக்கப்பட்டு உள்ளது.

இதுகுறித்து தென்னை நார் உற்பத்தியாளர்கள் கூறுகையில், பொள்ளாச்சி உள்ளிட்ட பகுதிகளில் எண்ணற்ற தென்னை நார் தொழிற்சாலைகள் உள்ளன. இங்கு கொப்பரை, தென்னை நார், காகித அட்டை ஆகியவை உற்பத்தி செய்யப்பட்டு, வெளி மாநிலம், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. பொள்ளாச்சி பகுதியில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் பலத்த மழையால் எங்களின் தொழில் வெகுவாக முடங்கி உள்ளது. இதனால் ரூ.200 கோடி வரை வர்த்தகம் பாதிக்கப்பட்டு வருகிறது. எனவே மத்திய மாநில அரசுகள் எங்களுக்கு கடனுதவி சலுகைகளை வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்து உள்ளனர்.

# பூமிதான நிலத்தில் மண்ணை திருடிவிற்ற கிராம நிர்வாக அதிகாரி!



பூமிதான இயக்கத்தை பற்றி ஏற்கனவே நமது பத்திரிக்கையில் தெரிவித்துள்ளோம். அச்செய்தியில் நாம் ஒரே ஒரு விவசாயி பற்றியும் அவருக்கு ஏற்பட்ட இன்னல்கள் பற்றியும் முழுமையாக தெரிவித்து இருந்தோம். ஆனால், தற்போது ஒரு கிராம நிர்வாக அலுவலர் இந்த அரசாங்க நிலத்தில் நூதன முறையில் எப்படி கொள்ளை அடிப்பது என்று யோசித்து, யாரிடமும் மாட்டிக் கொள்ளாமல் தப்பிப்பது எப்படி என்று தெரிந்து கொள்ளையடித்துள்ளார்.

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் தாலுகா, கொங்கர்பாளையத்துக்குஉட்பட்டகவுண்டம்பாளையம் கிராமத்தில் பணிபுரியும் கிராம நிர்வாக அலுவலர் திருமதி.உமா மகேஸ்வரி. இவர் கடந்த ஒன்றரை வருட காலமாக இங்கு பணியாற்றி வருகிறார். இவர் பூமிதான நிலங்களை தன் சொந்த நிலங்களைப் போல் பாவித்து எங்கேயும் முறையே ஒப்புதல் வாங்காமல் பூமிதான நிலத்தின் மண்ணை திருடியுள்ளார். அந்த கிராமத்தில் அரசாங்கத்திற்கு சொந்தமான நிலமான பூமிதான பூமியில் ஐந்து இடங்களில் பெரிய தொழிலதிபர்கள் மற்றும் பெரிய விவசாயிகளிடம் பணத்தைப் பெற்றுக் கொண்டு அவர்கள் உதவியுடன் திருமதி.உமா மகேஸ்வரி அவர்கள் மண்ணைத் திருடி உள்ளார்.

தன் தாயைப் போல் அந்த கவுண்டம்பாளையம் மக்கள் அந்த நிலத்தைப் போற்றி வந்தனர். ஆனால், இவர் அந்த கிராம மக்களிடம் இது அரசாங்கத்திற்கு சொந்தமான இடம் என்றும், இங்கு மண் எடுப்பதற்கு அரசே அனுமதி கொடுத்து விட்டதாகவும் கூறி மண்ணெடுத்துள்ளார்.இதனைப்பற்றிஎதுவும் அறியாத அந்த கிராம மக்கள் என்ன செய்வது என்று திகைத்து நின்றனர். இதைத்தொடர்ந்து அந்த கிராம மக்கள் சில சமூக ஆர்வலர்களிடம் சென்று நடந்ததை எடுத்துக் கூறினர்.சமூக ஆர்வலர்கள் மக்களுக்கு இது மாதிரி எந்த அரசு ஆணையும் கிடையாது, இதில் ஏதோ தவறு உள்ளதாக கூறி உள்ளனர்.

இதைத் தொடர்ந்து மக்கள் வி.ஏ.ஒ விடம் சென்று அரசாணை இருப்பதாக கூறினீர்கள் அதை காண்பியுங்கள் என்று கேட்டனர். நிலைமையை புரிந்து கொண்ட வி.ஏ.ஒ , “இந்த மண் திருட்டில் உங்களுக்கும்தான் பங்கு உள்ளது. ஏனென்றால், உங்கள் நிலத்தில் இருந்துதான் மண் எடுக்கப்பட்டது என்று அவர் கூறி அவர்களை மிரட்டி உள்ளார். இதைக் கேட்டு அதிர்ந்த கிராம மக்கள் என்ன செய்வது என்று தெரியாமல் விழி பிதுங்கி கொண்டிருந்தபோது சிலர் மட்டும் அந்த வி.ஏ.ஒவிடம் எதிர்த்து கேள்வி கேட்டனர். உடனடியாக அந்த வி.ஏ.ஒ எதிர்த்து கேள்வி கேட்டவர்களை பார்த்து வைத்துக்கொண்டு, அவர்களுக்கு சம்பந்தப்பட்ட அனைத்து சான்றிதழ்களையும் எந்தவிதமான விசாரணையும் இல்லாமல் முன் அறிவிப்பு இல்லாமல் தள்ளுபடி செய்துவிட்டார்.

இது தெரிந்த அந்த கிராம மக்கள் மறுபடியும் சமூக ஆர்வலர்கள் இடம் சென்று முறையிட்டுள்ளனர். இதைத்தொடர்ந்து அந்த சமூக ஆர்வலர்கள் கூறியதன் படி அரசியல் சூரியன் புலனாய்வுக் குழு விரைந்து சென்று அங்கு நடந்ததை கள ஆய்வு செய்தோம்.

அந்த கிராமத்தில் அந்த கிராம மக்கள் கூறியவாறு ஐந்து இடங்களில் மண் எடுத்ததற்கான அடையாளம் (அகலிகள்) தெரியவந்தது.

உடனடியாக நமது குழு நடந்ததை பற்றி கேட்டு அறிந்தோம்.

அதில் அவர்கள் கூறியது அந்த வி.ஏ.ஒ அவர்கள்

அந்த மக்களை பார்த்து நீங்கள் யாரிடம் போய் வேண்டுமானாலும் புகார் கொடுங்கள், அதனை எப்படி சரி செய்ய வேண்டும் என்பது எனக்குத் தெரியும். ஆனால், இந்த கிராமத்தில் வாழ்கிற நீங்கள் எப்படி என்னை பகைத்துக் கொண்டு இருப்பீர்கள் என்று பார்ப்போம் என்று மிரட்டியுள்ளார்.

இதைத்தொடர்ந்து கவுண்டம்பாளையம் இளைஞர்கள் சில காணொளியை காண்பித்தனர். அந்த காணொளியில் ஜே.சி.பி மற்றும் ஹிட்டாச்சி உதவியுடன் மண்ணை அள்ளி லாரியில் போட்டுக் கொண்டிருந்தனர்.இதை அந்த இளைஞர்கள் தங்களது கைபேசியில் படம் பிடித்துள்ளனர். சுமாராக 15,000 யூனிட் மண்ணை இந்த வி.ஏ.ஓ அவர்கள் திருடி உள்ளதாக மக்கள் கூறினர். எங்களிடம் மக்கள் வந்து இதற்கு ஒரு நல்ல ஆலோசனை வழங்குமாறு கேட்டுக் கொண்டனர்.எங்களது மூத்த நிர்வாகிகளின் அறிவுறுத்தலின்படி,முறையே புகார் ஒன்றை தயாரித்து செய்து வருவாய் கோட்டாட்சியரிடம் கொடுத்தனர்,ஊர்மக்கள். இந்த புகாருக்கான விசாரணை இந்த மாதம் வருவாய் கோட்டாட்சியர் விசாரிக்க உள்ளார். இதனை தொடர்ந்து நாங்கள் அந்த கிராம மக்களை அழைத்துச் சென்று புவியியல் மற்றும் கனிமவள சுரங்க துறை கூடுதல் இயக்குனர் திரு.ரமேஷிடம் கேட்டோம்.

அவர் அதற்கு முறையே எனக்கு ஒரு புகாரினை (மனுவாக) கொடுங்கள். அந்த மனுவை வைத்துக்கொண்டு சம்பந்தப்பட்ட நபர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுப்பேன் என்று உறுதி அளித்தார். அதுமட்டுமின்றி அந்த மண் எடுத்த இடத்தை ஆய்வு செய்து எவ்வளவு மண் திருடப்பட்டது என்ற அறிக்கையையும் வெளியே விடுவதாக கூறினார்.

பண்டையகாலத்தில்மக்கள்பண்டமாற்றுமுறையையே கையாண்டனர். அதே வழியில் தற்போது மக்களை மிரட்டி பண்டமாற்று முறையில் தனக்கு தேவையான பணத்தை பெற்றுக் கொண்டார் திருமதி.உமா மகேஸ்வரி அவர்கள். இது லஞ்ச ஒழிப்புத் துறையினராலும் ஒன்றும் செய்ய முடியாத அளவிற்கு நூதனமான முறையில் கொள்ளையடித்துள்ளார்.

இதுபோன்று பணத்தாசை பிடித்த பேய்களை எப்படி ஓட்டுவது? முதலில் லஞ்சம் வாங்குவது என்பது ஏதாவது காரியம் நடைபெற வேண்டும் என்பதற்காக லஞ்சம் வாங்கினர். இல்லையென்றால் தனக்கு சாதகமாக சான்றிதழ் வேண்டும் என்பதற்காகவும் லஞ்சம் கொடுக்கப்பட்டது.

இது போன்ற அதிகாரிகள் செய்யும் தவறுக்கு உடனடியாக எந்த நடவடிக்கையும் எடுக்காமல் அரசும் அரசு உயர் அதிகாரிகளும் கண்டு கொள்ளாமல் விடுவது பாலுக்கு பூனையை காவல் வைத்துவிட்டு வேடிக்கை பார்ப்பது போலாகும். எனவே, மாவட்ட நிர்வாகம் இந்த கிராம நிர்வாக அலுவலர் மீது நடவடிக்கை எடுப்பது மட்டுமில்லாமல் இதன் பின்னணியில் அவருக்கு துணை நின்று இந்த மண் அள்ளுவதற்கு உதவி செய்த அத்தனை பேர் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர்.

இதுபோன்ற அரசாங்க அலுவலர்கள் நாளைய தலைமுறைக்கு எதை விட்டுச் செல்வார்கள். மனிதனை மனிதன் வேட்டையாடி சாப்பிடும் காலம் வரும் என்று பல தீர்க்கதரிசிகள் கூறி உள்ளனர். அந்த தீர்க்கதரி சிகள் கூறியது போன்று இன்று இந்த வி.ஏ.ஓ திருமதி. உமா மகேஸ்வரி மண்ணை திருடி விற்றுள்ளார்.நாளை மண் கிடைக்கவில்லை என்றால் மனிதர்களையும் விற்று உண்ண மாட்டாரா.

இந்த கிராம நிர்வாக அலுவலர் வேலியே பயிரை மேய்ந்தது போல் அரசுக்கு சொந்தமான நிலத்தில் உள்ள மண்ணை தன்னிச்சையாக அரசு அதிகாரிகளையும், பொதுமக்களையும் கிள்ளுக்கீரையென நினைத்து, அதிகாரத் திமிர் பிடித்து, ஆவணப் போக்கோடு சட்டவிரோதமாக திருடியது மட்டுமில்லாமல் தட்டி கேட்ட சமூக ஆர்வலர்களையும், இதற்குத் துணையாக நின்றவர்களையும்தன்னிச்சையாகபழிவாங்கதுடிக்கும் இவர் மீது துறை அதிகாரிகள் கடுமையான நடவடிக்கை எடுப்பதன் மூலமே இவர் போன்ற அரசு அலுவலர்கள் நேர்மையான முறையில் பணியாற்ற வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்குவதற்கு ஊன்றுகோலாக அமையும் என்பதே நமது கருத்து!

மண்பயனுறவேண்டும்என்பதுஅரசின்கொள்கையாக இருக்க வேண்டும்.

அதை விட்டு

இதுபோன்ற ஊழல் பேய்கள் பயனடைய விட்டு விடக்கூடாது!

விட்டுவிட்டால்ஞ்

கண்ணை விற்று சித்திரம் வாங்கிய கதைதான்!...

# மணிப்பூரில் நடப்பது மத கலவரமா? இனக்கலவரமா?




1950களில் இந்தியாவிடமிருந்து பிரிந்து செல்ல தீவிரமாக போராடிய மணிப்பூர். அப்புறம் கொஞ்சம் கொஞ்சமாக அந்த தீவிரம் தணிந்து இன்று ஒற்றுமையுடன் இருக்கிறது.

பலநூற்றாண்டுகளாகஇதுஒருபோராட்டபூமியாகவே இருந்து வருகிறது.

இங்கு பரவலாக மூன்று இனம் இருக்கிறது.

உலகை உலுக்கிய மணிப்பூர் கலவரம் பெண்களுக்கு எதிரான நிர்வாண சித்திரவதை பின்னணி என்ன?

மணிப்பூரில் நடப்பது என்ன? மணிப்பூரில் நடப்பது மதக்கலவரமா?அல்லதுஇனகலவரமா?நடுநிலையோடு ஒரு அலசல்...

மணிப்பூர் மாநிலம் 90% மலைகளையும் 10% சமவெளியையும் அடக்கிய நிலப் பகுதிகளை கொண்டது. மெய்தி, குக்கி மற்றும் நாகா என்கிற மூன்று முக்கியமான இனங்கள் இந்த பகுதியில் வசிக்கின்றன. இவர்களைத் தவிர சிறு சிறு இன குழுக்களும் இந்த பகுதியில் உண்டு. மணிப்பூர் உடனடியாக இந்தியாவில் இணையவில்லை கொஞ்சம் வருடங்கள் கழித்து தான் இந்தியாவில் இணைந்தது.

இந்த மெய்தி இன மக்கள் 10 சதவீத சமவெளியை உள்ளடக்கி இருக்கிற பகுதிகளில் வாழ்கிறார்கள். இவர்கள் விவசாயம் செய்கிறார்கள். கனிம வளம் உள்ள பூமி. மேலும் மணிப்பூர் மக்கள் தொகையில் 52% இந்த மெய்தி இன மக்களே... இதனால், இவர்களிடம் தான் அதிகாரம் எல்லாம் இருக்கிறது. கிட்டத்தட்ட 60 சட்டமன்ற உறுப்பினர்களின் 40 எம்எல்ஏக்கள் இந்த இனத்தை சார்ந்தவர்கள்தான். அரசியல் முடிவு எடுக்கக்கூடிய அதிகாரம், கொள்கை முடிவு எடுக்கக்கூடிய அதிகாரம் எல்லாம் இந்த மெய்தி இன மக்களிடம் தான் உள்ளது. 52 சதவீதம் போக மக்கள் தொகையில் இரண்டாவது இடத்தில் இருப்பவர்கள் நாகா இன மக்கள். இவர்கள் நாகலாந்திலிருந்து வந்து குடியேறியவர்கள். இவர்கள் 11 சட்டமன்ற உறுப்பினர்களை தன் இனத்தில் வைத்திருக்கிறார்கள்.

மீதி இருப்பவர்கள் தான் குக்கி இன மக்கள். இதில் தான் 70% கிறிஸ்தவ மக்கள் இருக்கிறார்கள். இந்துக்கள் மற்றும் இஸ்லாமிய மார்க்கங்களைப் பின்பற்றுபவர்களும் இந்த குக்கி இனத்தில் உண்டு. இவர்கள் இனத்தில் இருந்து ஒன்பது எம்எல்ஏக்கள் மட்டுமே இவர்கள் இருப்பார்கள். எந்த அரசியல் அதிகாரமும் முடிவெடுக்கக்கூடிய ஆளுமையும் இவர்களிடத்தில் கிடையாது. இந்த குக்கி மற்றும் நாகா மக்கள்தான் தொண்ணூறு சதவீதம் மலைகள் உள்ள பகுதிகளில் வாழ்கிறார்கள்.

இப்பொழுது பிரச்சனை இந்த குக்கி மற்றும் மெய்தி இனகுழுக்களுக்குஇடையேதான்.அதைஎன்னவென்று பார்க்கும் முன்பாக மணிப்பூரில் ஒரு சில அரசியல்களை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்த 90 சதவீதம் மலைப்பகுதிகளில் வாழும் அனைவருமே ஷெட்யூல் ட்ரைப் (ST) அட்டவணை பிரிவில் இருக்கிறார்கள்.

இந்த 90% மலைகள் உள்ள இந்த இடத்தில் ஒருவர் நிலம் வாங்க வேண்டும் என்றால் அவர்கள் கண்டிப்பாக ஷெடியூல் ட்ரைப் ஆக இருந்தாக வேண்டும். மெய்தி இன மக்கள் இந்த இடத்தில் நிலங்கள் வாங்க முடியாது. ஏனென்றால், அவர்கள் ஷெட்யூல் ட்ரைப் நிலைமையில் இல்லை. மேலும் மணிப்பூரின் பூர்வீக குடிமக்கள் இந்த குக்கி இனத்தவர்கள்தான்..

இந்த குக்கி இன மக்கள் இயல்பாகவே கிறிஸ்தவ மதத்தை பல காலத்திற்கு முன்பாகவே ஏற்றுக்கொண்டபடியால் கிறிஸ்தவ மிஷனரிகள் கொண்டு வந்த கல்வி சாலைகளில் அதிகம் இருந்ததினால் அவர்கள் இயல்பாகவே கல்வியில் மேம்பட்டசமுதாயமாகஅவர்கள்உருவாகஆரம்பித்தனர். இவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக வாழ்க்கையில் வசதி ஏற்பட்டவுடன் இந்த 10 சதவீதம் நிலம் வைத்திருக்கிற மெய்தி மக்கள் வாழும் சமவெளிகளில் நிலத்தை வாங்கி அங்கு குடியேற ஆரம்பித்தனர். அதே நேரத்தில் மெய்தி இன மக்கள் 90% நிலங்களை வைத்திருக்கிற இந்த குக்கி மக்கள் வாழும் பகுதிகளில் நிலங்கள் வாங்க முடியாது.

குக்கி இன மக்கள் மணிப்பூர் எங்களுடைய சொந்த மண். ஆனாலும், எங்களால் இந்த மண்ணை ஆள முடியாது. எங்களால் எந்த அரசியல் முடிவும் எடுக்க முடியாது நாங்கள் வெறும் ஒன்பது சட்டமன்ற உறுப்பினர்களைத்தான்வைத்திருக்கிறோம்.எங்களால் எந்த அரசியல் முடிவும் எடுக்க முடியாது அதனால் எங்கள் இனத்திற்கு எந்த பிரயோஜனமும் கிடையாது. அதனால் நாங்கள் படித்து முடித்து வேலை பார்த்து ஒரு நல்ல இடத்தில் நிரந்தரமாக வாழத்தான் ஆசைப்படுகிறோம். அதற்கு அனுமதி கிடையாதா என்று கேட்கிறார்கள்.

மெய்தி இன மக்கள், தற்பொழுது பர்மாவில் இருந்து ஆங்கிலேயர்களால்சண்டைபோடுவதற்காக அழைத்து வரப்பட்ட குக்கிகளை வெளியேற்ற வேண்டும் என்று தற்பொழுது பிரச்சினையை ஆரம்பித்தார்கள். அதற்கு ஏற்கனவே மணிப்பூரை பூர்வீகமாக கொண்ட குக்கீகள், பர்மாவிலிருந்தகுக்கிகள்இங்கேவந்தாலும்அவர்களும் எங்கள் இனம்தான் எங்கள் மொழிதான் பேசுகிறார்கள். அதனால் அவர்களை வெளியேற்றக் கூடாது என்று எதிர் வாதம் வைக்க பிரச்சனை கொஞ்சம் கொஞ்சமாக பெரிதானது.

இதற்கு எரிகிற கொள்ளியில் எண்ணெய் வார்த்தது போல இந்த மெய்தி இன மக்களுக்கும் ஷெட்யூல் ட்ரைப் (ST) அந்தஸ்து கொடுத்து இருக்கிறது மத்தியில் உள்ள சமூக அதிகாரம். ஏற்கனவே மெய்தி இன மக்கள் ஆட்சி அதிகாரத்தில் இருக்கிறார்கள் எந்த அரசியல் முடிவையும் அவர்களால் மட்டுமே மணிப்பூர் மண்ணில் எடுக்க முடியும். இவர்களுக்கும் ஷெட்யூல் ட்ரைப் (ஷிஜி) கொடுத்து விட்டால் ஏற்கனவே ஆட்சி அதிகாரத்திலும் இருக்கிற அவர்கள் இதனால் இன்னும் பலம் பொருந்தியவர்கள் ஆகிவிடுவார்கள். மக்கள் தொகையிலும் அவர்கள் அதிகம் அவர்கள் எங்கள் பகுதியில் வந்து நிலம் வாங்கி ஆட்சி அதிகாரம் முழுமையும் அவர்கள் அதிகாரத்துக்குள்ளாக போய்விடும் எங்களால் ஒன்றும் செய்ய முடியாத நிலை ஏற்படும். இருக்கிற வாழ்க்கையும் நாங்கள் விட்டுவிட நேரிடும்என்றுகுக்கிஇனமக்கள்பயப்பட,இப்படித்தான் பிரச்சனை பெரிதானது.

நாங்கள் 10% நிலப்பகுதியில் மட்டுமே வாழ்கிறோம். மலைகளில் இருந்து படித்து நல்ல நிலையில் இருக்கிறவர்கள் இங்கே வந்து நிலம் வாங்கினால் எங்களுக்கென்று இருக்கிற 10% நிலமும் எங்கள் கையை விட்டுப் போய்விடும் என்று மெய்தி இன மக்கள் கவலைப்படுகிறார்கள். அதனால் எங்களுக்கும் ஷெட்யூல் ட்ரைப் அந்தஸ்து கொடுக்க வேண்டும் என்று அவர்கள் போராடுகிறார்கள்.

இதில் கவனிக்கத்தக்க விஷயம் இந்த ஷெட்யூல் ட்ரைப் அந்தஸ்தை பல வருடங்களுக்கு முன்பாக மத்திய ஆட்சியில் இருந்து கொடுக்க முன் வந்த போது எங்களுக்கு அது தேவையில்லை. குக்கிகள்தான் மலைகளில் இருந்து வாழ்கிற பழங்குடி மக்கள் அவர்களுக்கு கொடுங்கள் என்று இதற்கு முன் கூறிய மெய்திக்கள் இப்பொழுது அதே கோரிக்கை இவர்களை வைத்திருப்பது தான் வினோதம்.

குக்கி இன மக்கள் ஷெட்யூல் ட்ரைப்ஷிப் அந்தஸ்து மெய்திகளுக்கு கொடுக்கக் கூடாது. நாங்கள் எங்களுடைய நிலப்பகுதியை மட்டுமல்ல. சுத்தமாக அதிகாரத்தையும் இழந்து விடுவோம். மேலும், எங்களோடு வாழ்கின்ற எங்களுடைய இனமாகிய பர்மாவில் இருந்து வந்து குடியேறிய குக்கி இனத்தையும் நாங்கள் வெளியேற்ற மாட்டோம் என்று உறுதியாக நிற்கிறார்கள். இது கவனிக்கத்தக்கப்பட வேண்டிய விஷயம் மணிப்பூர் என்கிற ஒரு மாநிலம் உருவாவதற்கு முன்னே இந்த பர்மாவில் இருந்து அழைத்து வரப்பட்ட

ஒரு பகுதி குக்கி இன மக்கள் அங்கு வாழ ஆரம்பித்து விட்டார்கள். இப்பொழுது அவர்களை வெளியேற்ற வேண்டும் என்று சொல்வதில் என்ன நியாயம் இருக்கிறது என்று தெரியவில்லை? இது எப்படி என்றால் இலங்கையில் ஈழத் தமிழர்கள் மலையக தமிழர்கள் என்று இருப்பது போல். ஈழத் தமிழர்கள் பூர்வீக குடி. மலையகத் தமிழர்கள் வேலைக்கு சென்றவர்கள். ஆனாலும், அவர்கள் அங்கேயே வாழ்ந்து ஈழத்தின் பூர்வகுடி தமிழர்கள் ஆகவே மாறிவிட்டனர். அது போன்ற கதை தான் மணிப்பூரிலும்.

தற்பொழுது மெய்தி இன மக்கள் தங்கள் பகுதிகளில் குடியிருக்கிற குக்கி இன மக்கள் வெளியேற வேண்டும். இல்லையென்றால் தாக்கப்படுவார்கள் என்று கூறிக்கொண்டு அவர்களை கடுமையாக தாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அதுதான் நாம் தற்போது தொலைக்காட்சி பெட்டிகளில் செய்தியாக பார்ப்பது. இவர்கள் மலைப் பகுதிகளுக்கு சென்று குக்கி இன மக்களை தாக்க முடியாது. ஏனென்றால், இரண்டு குழுக்களுமே ஆயுதம் வைத்திருக்கிறது. அதனால் அவருடைய கோபம் வெறியாக மாறி தங்கள் பகுதிகளில் படித்து முன்னேறி நிலம் வாங்கி குடியேறிய குக்கி இன மக்களை நோக்கி வெடிக்க ஆரம்பித்து இருக்கிறது. இந்த ஆற்றாமை மற்றும் வெறியினால் ஏற்பட்ட சில வக்கிரமக்காரர்களின் கொடுமையான செயல்தான் உலகம் முழுவதும் பரவிய பழங்குடியின பெண்களை நிர்வாணப்படுத்தி அழைத்துச் சென்ற அந்த வக்கிர வீடியோ காட்சிகளும்.

வெளி உலகுக்கு இனக் கலவரமாக தெரிந்தால் தமக்கு ஆதரவு கிடைக்காது என்று எண்ணுகிறவர்கள் அதை மத மோதல்போல சித்தரித்து கொண்டு வருகிறார்கள். இரண்டு தரப்பில் ஒரு சில நியாயங்கள் இருக்கிறது. மெய்தி இன மக்களுக்கு ஷெட்யூல் ட்ரைப் அந்தஸ்து கொடுத்தால் கொஞ்சம் இருக்கும் அதிகாரத்தையும் மொத்தமாக நாம் இழந்து விடுவோம் என்று குறைந்த ஜனத்தொகை கொண்ட குக்கி மக்கள் பயப்படுகிறார்கள்.

இதுதான் அங்கு பிரச்சனை. மணிப்பூரின் பூர்வீக குடிமக்கள் இந்த குக்கி இன மக்களே. ஏனென்றால், 90 சதவீதம் நிலப்பரப்பு இந்த இன மக்களிடையே தான் இருக்கிறது. ஆனால் 60 எம்எல்ஏக்களில் இந்த நிலப்பரப்பில் அவர்களுக்கான இடம் வெறும் 9 எம்எல்ஏக்கள் மட்டுமே. அதனால் அவர்கள் எதிர்காலத்தில் நமது இனத்திற்கு தேவையான எந்த முடிவும் அதிகாரத்தையும் அவர்கள் சட்ட வடிவில் கொண்டு வர முடியாது. மேலும், மெய்தி இன மக்களுக்கு ஷெட்யூல் ட்ரைப்(ST) என்ற அந்தஸ்து கொடுத்து விட்டால் இன்னும் அவர்களுடைய நிலைமை மோசமாகிவிடும் என்பதினால் தான் அவர்கள் அதை கடுமையாக எதிர்க்கிறார்கள்.

கடந்த ஆகஸ்ட் 31, 2015ல் பூட்டப்பட்ட மணிப்பூர் சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட மூன்று மசோதாக்கள் இந்த இரண்டு சமுதாயத்தினருக்கும் எதிரானதாக கருதப்பட்டதால் இந்த விவகாரத்தில் அமைதியாக இருந்த தெற்கு மணிப்பூரில் உள்ள சுராசந்த்பூரில் சலசலப்பு ஏற்பட்டது.

இந்த மசோதாக்கள் பழங்குடியினருக்கு எதிரானவை என்று கூறி, ஆகஸ்ட் 31 மற்றும் செப்டம்பர் 1, 2015 க்கு இடையில் கலவரங்கள் வெடித்து, பொது சொத்துக்கள் பெருமளவில் அழிக்கப்பட்டன. மாவட்டத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் வீடுகள் எரிக்கப்பட்டன.

அன்றிலிருந்து இன்று வரை கலவர பூமியாகவே தொடர்ந்து விட்ட மணிப்பூர் மண்ணின் கலவரம் இன்று உச்ச நிலையை தொட்டு நாடாளுமன்றத்தையே ஸ்தம்பிக்க வைக்கும் அளவுக்கு வீரியம் மிகுந்ததாய் மாறிவிட்டது. அதுவும், பெண்களுக்கு எதிரான கொடுமையில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் யாராக இருந்தாலும் பாரபட்சம் இல்லாமல் நடவடிக்கை எடுப்பதாக மத்திய ஆளும் அரசால் பாராளுமன்றத்தில் வாக்குறுதி கொடுக்கப்பட்டுள்ளது. எனினும் தேசத்திற்கே களங்கத்தை விளைவிக்கும் அளவுக்கு நடந்து விட்ட இந்த கொடுமையான சம்பவம் வேறு எந்த மாநிலத்திற்கும் மேலும் பரவாமல் தடுக்க வேண்டியது இந்தியாவில் உள்ள மத்திய மற்றும் அனைத்து மாநில அரசுகளின் பொறுப்பாகும்.

எனவே, மணிப்பூரில் நடப்பது முழுக்க முழுக்க இன சண்டை மட்டுமே. ஏனென்றால், இரண்டு சமுதாய மக்களிலும் இந்துக்களும் கிறிஸ்தவர்களும் வாழ்கிறார்கள். எனவே. மணிப்பூர் கலவரம் என்பது தமிழர்களாகிய நமக்கு மறைமுகமாக கொடுக்கப்பட்ட ஒரு பாடமாகவும் நாம் எடுத்துக் கொள்ளலாம். ஒரு இன அதிகாரம், மொழி அதிகாரம் எவ்வளவு முக்கியம் என்பது நமக்கு இந்த கலவரத்தின் மூலம் தெரிந்து கொள்ளலாம். இது போன்ற இனச் சண்டை தமிழ்நாட்டிலும் நடக்க வாய்ப்பு இல்லை என்பதை நாம் மறுக்க முடியாது.

# 13 கிராம நிர்வாக அலுவலர்கள் பணியிட மாற்றம்

வேலூர் மாவட்டம் அணைக்கட்டு தாலுகாவில் பணிபுரியும் கிராம நிர்வாக அலுவலர்கள் 13 பேர் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி பீஞ்சமந்தையில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வந்த குணராஜ் அணைக்கட்டுக்கும், நந்திவர்மன் கீழ்கிருஷ்ணா புரத்தில் இருந்து வெட்டுவா னத்திற்கும், முனிரத்தினம் பொய்கையில் இருந்து பள்ளிகொண்டாவுக்கும், தமிழ்அரசு பூதூரில் இருந்து கீழாச்சூருக்கும், அபிலாஸ் சின்னபள்ளிக்குப்பத்தில் இருந்து ஒடுகத்தூர் மற்றும் பீஞ்சமந்தைக்கு கூடுதல் பொறுப்பு, கார்த்தி கீழாச்சூரிலிருந்து செதுவாலைக்கும், சிவமூர்த்தி ஒடுக்கத்தூரிலிருந்து கருங்காலிக்கும், தமிழழகன் அணைக்கட்டில் இருந்து திப்பசமுத்திரத்திற்கும், ஞானசுந்தரி பள்ளி கொண்டாவில் இருந்து பொய்கைக்கும், தங்கமுத்து வெட்டு வாணத்தில் இருந்து பூதூருக்கும், கிருஷ்ணவேணி கருங்காலி யிலிருந்து கீழ்கிருஷ்ணாபுரத்திற்கும், குமரேசன் மேல்அர சம்பட்டில் இருந்து சின்ன பள்ளிக் குப்பத்திற்கும், அன்பு செதுவாலை யிலிருந்து மேல்அரசம்பட்டுக்கும் பணியிடமாற்றம் செய்து வேலூர் சப்கலெக்டர் கவிதா உத்தரவிட்டு உள்ளார். மேலும் பணியிட மாற்றம் செய்யப்ப ட்டவர்கள் உடனடியாக புதிய பணியி டத்தில் சென்று சேர வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# 8 வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பணியிட மாற்றம்

ராணிப்பேட்டை மாவட்டத்தில் 8 வட்டார வளர்ச்சி அலுவலர்களை பணியிட மாற்றம் செய்யப்பட்டு உள்ளார். அதன்படி நெமிலி வட்டார வளர்ச்சி அலுவலராக பணியாற்றி வந்த சிவராமன், வாலாஜா வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) ஆகவும், அங்கு பணியாற்றிய ரவி, நெமிலி வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) க்கும் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். அதேபோல் நெமிலி வட்டார வளர்ச்சி (கி.ஊ) அலுவலராக பணியாற்றிய பாஸ்கரன், ஆற்காடு வட்டார வளர்ச்சி (கி.ஊ) அலுவலகராகவும், அங்கு பணியாற்றிய பிரபாகரன் நெமிலி வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகவும், அரக்கோணம் வட்டார வளர்ச்சி அலுவலராக பணியாற்றிய வெங்கடேசன், காவேரிப்பாக்கம் வட்டார வளர்ச்சி (கி.ஊ) அலுவலராகவும், அங்கு பணியாற்றிய ரவிச்சந்திரன் , அரக்கோணம் வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகவும் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் கண்காணிப்பாளராக பணியாற்றிய அன்பரசன் திமிரி வட்டார வளர்ச்சி அலுவலர் ( கி.ஊ) ஆகவும், அங்கு பணியாற்றிய ஜெயஸ்ரீ மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கண்காணிப்பாளராகவும் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். நிர்வாக நலன் கருதி பணி மாறுதல் அளிக்கப்பட்டுள்ள வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வருகிற 31ந் தேதிக்குள் சேருமாறு மாவட்ட கலெக்டர் வளர்மதி உத்தரவிட்டுள்ளார்.


**விளம்பர கட்டணம்**

| விவரம் | பின்பக்க அட்டை வண்ணம் | உள் அட்டை வண்ணம் | இதழ் உள்ளே கருப்பு வெள்ளை |
|---|---|---|---|
| முழு பக்கம் | ரூ.20,000 | ரூ.15,000 | ரூ.5,000 |
| அரை பக்கம் | ரூ.10,000 | ரூ.7,500 | ரூ.2,500 |



Owned, Published & Printed by **K.MANIKANDAN** on Behalf of: M/s. Arasiyal Suriyan Monthly, Printed At **SEAMAN GRAPHICS** No.7/253, KVN Puram, 2nd Street, Kilpauk Garden, Chennai-600 010. and published from: 98/1, Vijayamangalam Road, Hospital Road, Uttukuli, Tiruppur-638751. Editor: **K.MANIKANDAN**, Mobile:90253 05909. Mail ID:arasiyalsuriyan77@gmail.com

# PRADEEP & CO

*Caring for you...*

Special OFFER

# 5 நிமிடத்தில்

## தனி நபர் கடன் / தொழிற்கடன்

condition apply*

- GST வரி செலுத்தும் நபர்களுக்கு முன்னுரிமை
- GST Turnover பொறுத்து வியாபார கடன் பெற்றுத்தரப்படும்.

முன்பதிவு செய்யும் முதல் 500 நபர்களுக்கு சேவை கட்டணம் கிடையாது.

## பர்சனல் லோன் வங்கி கடன்

மாத சம்பளத்தின் அடிப்படையில் அனைத்து துறை அரசு ஊழியர்கள் மற்றும் தனியார் Pvt., Bank Account Credit,

Net Salary Rs. 8,000/- க்கு மேல் சம்பளம் பெறுபவர்களுக்கு

**1 லட்சம் முதல் 20 லட்சம் வரை**

தனி நபர் கடன்

மூன்று நாட்களில் லோன் வசதி செய்து தரப்படும்.

## Business Loan – வியாபாரக்கடன்

GST வரி செலுத்தும் நபர்களுக்கு முன்னுரிமை

- GST - Registeration Certificate இருக்கும் நபர்களுக்கு 7 வேலை நாட்களில் லோன் வசதி செய்து தரப்படும்.
- GST - Turnover பொறுத்து வியாபார கடன் பெற்று தரப்படும்.

GST - Registeration Certificate செய்து தரப்படும்.
GST - Filing செய்து தரப்படும்.

**ABOVE ALL CIBIL BASED LOAN**

CIBIL பிரச்சனை உள்ளவர்களுக்கு சரிசெய்து லோன் அப்ளை செய்து தரப்படும்.

## Availa Personal Loan that suits your needs

From 30+ Bank & Financial Institutions Serving all Types of Customer Segments

### Loan Offers ranging from

- Rs. 10,000 to Rs. 10 Lakhs
- Tenor From 3 Months to 5 Years
- Interest rate from 7.99% to 36% p.a. reducing basis

### Documents Required

- Identity Proof
- Signature Proof
- Bank Statement
- Salary Proof
- Address Proof
- Employment Proof

HDFC BANK · finzy · HDB · Fullerton India · KreditBee · NIRA · finnable · UPWARDS · MONEYTAP · PaySense · InstaMoney · redcarpet

**74181 12343** ABOVE ALL CIBIL BASED LOAN

CIBIL பிரச்சனை உள்ளவர்களுக்கு சரிசெய்து லோன் அப்ளை செய்து தரப்படும்.

Arasiyal Suriyan, Tamil, English Monthly Registed with the Registar of Newspapers for India.
AUGEST 2023. RNI No: TNBIL/2022/83024. Date of Publicaton : Every Month First Week

அரசியல்

# சூரியன்

சார்பாக

# அனைவருக்கும் இனிய சுதந்திர தின நல்வாழ்த்துக்கள்

அரசியல் சூரியன் NEWS

## நிருபர்கள் தேவை

தமிழகம் முழுவதும், மாவட்ட நிருபர்கள் & தாலுக்கா நிருபர்கள் தேவை

cell: 90253 05909

https://arasiyalsuriyan.com/

உங்கள் சேவைக்கான
## துப்பறியும் நிறுவனம்

* Pre-Matrimonial Investigation
* Post Matrimonial Investigations
* Post Matrimonial Disputes
* Extra Marital Affairs
* Surveillance
* Background Check
* Child Retrival
* Teenagers Monitoring
* Individual Character Report
* Pre Employment Investigations
* Post Employment Investigations
* Asset Verifications
* Missing Persons
* Theft Investigations
* Witness Locates
* Financial Malpractice
* Insurance Investigations
* Work Place Violence & etc.,

I DETECTIVE
Your True Investigator

idetective1977@gmail.com
90253 05909